நம் வழி வேளாண்மை

பருவம் 31 ஜூலை – செப்டம்பர் 2022 இதழ் 2

சோத்யாத்ரா (Shodhyatra)

47வது அறிவைத்தேடும் நடைபயணம் : 21–5–2022 முதல் 27–5–2022 வரை
பரமக்குடியிலிருந்து – இராமேஸ்வரம் வரை நடைபெற்றது.

இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை

நம் வழி வேளாண்மை

பருவம் 31 ஜூலை – செப்டம்பர் 2022 இதழ் 2

ஆசிரியர்
பெ. விவேகானந்தன்

நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.

நம்வழி வேளாண்மை குழுமம்
பிற மொழி இதழ்கள்

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பள்ளி ஸ்ருஜனா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே

நம் வழி வேளாண்மை
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலைபேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

ஆங்கில இதழ் முகவரி
Prof. Anil Gupta,
Honey Bee,
SRISTI, AES Boys Hostel Campus,
Near Gujarat University Library & SBI Bank,
Navrangpura, Ahmedabad-380 009, Gujarat,
email: honeybee@sristi.org

பெரியோர் சம்மந்தம் பேரானந்தம்

நல்லோர்களின் நட்பு நல்லதொரு சொத்து. வல்லுநர்களிடம் சில திறமைகள் உள்ளன. வல்லுநர்களிடம் நல்ல குணங்களும் சேர்ந்து விட்டால் அத்தகையோரை வணங்கி வாழ்த்தலாம். நல்லோர்களிடம் அறிவும், நிபுணத்துவமும் இல்லையென்றாலும் கூட அவர்களுடைய நட்பு நல்ல பலனையே தரும். ஒரு முறை டி.ஆர்.டி.ஓ (DRDO) ல் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்கள் விஞ்ஞானியாக இருக்கும் போது ஆயுதங்களை வெடிக்கச் செய்யும் ஒரு கம்யூட்டர் சாப்ட்வேர் ஒன்று உருவாக்க ஒரு விஞ்ஞானியிடம் வேலை கொடுத்துள்ளார். அவர் பலவாறு முயன்றும் அந்த சாப்ட்வேரை முடிக்க முடியவில்லை. கலாம் அவர்களுக்கும் இதில் அவ்வளவாக நிபுணத்துவம் இல்லை. இருப்பினும் ஒவ்வொரு வாரமும் அவர் எப்படி முயற்சி எடுத்துள்ளார் என்பதை பொறுமையுடன் கூற கேட்டு வருவார். இந்த சிறு உற்சாகமே அந்த விஞ்ஞானியை சாப்ட்வேரை வெற்றிகரமாக முடிக்க செய்ய வைத்தது. அதாவது நல்லோருடன் சிறிது நேரம் உரையாடினாலோ அது நல்ல பலனைத் தரும்.

நல்லோர் என்று பெயர் எடுக்க பிறரிடம் சினம் கொள்ளாமல் இருப்பது மிக முக்கியமாகும். இது பல வருட முயற்சியினால் கை கூடும். "அடுத்தவர்களுடைய நல்ல குணங்களை புகழ்வதால் அவர்களுடைய புண்ணிய பலன் நமக்கு கிடைக்கும்; இகழ்ந்தால் அல்லது சினம் கொண்டு திட்டினால் அவர்கள் செய்த பாவம் நமக்கு வந்து சேரும்" என்ற கூற்று உண்மை என்றால் அது மிகையாகாது. சினத்தினால் காலமும், பணமும் விரையமாகும் நிலை ஏற்படும். நாம் பல வருடங்கள் செய்த நற்காரியங்களின் பலன் நம்மிடமுள்ள சினத்தினால் ஒரு நெடியில் கரைந்து விடும். அடுத்தவர் மூன்றாம் நபரை திட்டினாலும் திட்டுவதை கேட்போருக்கும் அந்த பாவம் வந்து சேரும். இதனால்தான் காந்தியடிகளும் தனது அறையில் 3 குரங்கு பொம்மைகளை வைத்திருந்தார். ஒரு பொம்மை கெட்டதை பார்க்கக் கூடாது என்று கண்ணை பொத்தி கொண்டிருக்கும். இரண்டாவது பொம்மை கெட்ட வார்த்தைகளை பேசக் கூடாது என்று வாயைப் பொத்திருக்கும். முன்றாவது பொம்மை கெட்ட வார்த்தைகளை கேட்கக் கூடாது என்று காதை பொத்திருக்கும்.

"வைஷ்ணவ ஜனதோ" என்ற குஜராத்தி பாடலின் தமிழாக்கம் 22ம் பக்கம் பார்க்க. – ஆசிரியர்

47வது அறிவைத்தேடும் நடைபயணம் மேகவர்ணத்தின் மூலிகை வைத்யம்

குஜராத் மாநிலம், அகமதாபத்தில் உள்ள சிருஷ்டி என்ற நிறுவனம், மதுரை சேவா, அடித்தள கண்டுபிடிப்பாளர்கள் சங்கம் மற்றும் தானம் அறக்கட்டளை நிறுவனத்துடன் இணைந்து 47வது அறிவைத்தேடும் நடைபயணம் (Shodhyatra) பரமக்குடியிலிருந்து இராமேஸ்வரம் வரை செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

பாரம்பரிய அறிவு மற்றும் அடித்தள அல்லது சாதாரண மக்களின் கண்டுபிடிப்புகள், ஆலோசனைகளை தெரிந்து கொள்ளவும் பிற இடங்களில் தொகுக்கப்பட்ட அறிவை பகிர்ந்து கொள்ளவும் இந்த நடைப்பயணம் மேற்கொள்ளப்படுகிறது. கிராமப்புறங்களில் குறிப்பாக இயற்கைவளம் சூழ்ந்த பகுதிகளில் பல்லுயிர் பன்மய அறிவு, அங்குள்ளோர் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கு அல்லது குறைபாடுகளுக்கு அவர்கள் கண்டிறிந்த தீர்வு முறைகளை முறையாகத் தொகுத்து பகிர்ந்துகொள்ளவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த நடைபயணம் 22–5–2022 அன்று பரமக்குடியிலிருந்து துவங்கி 27–5–2022 அன்று இராமேஸ்வரத்தில் முடிவடைந்தது. இந்த நடை பயணத்தில் பல்லுயிர் பன்மய போட்டி (மாணவர்களுக்காக அவர்களின் பல்வேறு தாவரங்களை அடையாளம் கண்டு தெரிவு செய்யும் போட்டி), பாரம்பரிய உணவு பதார்த்தங்கள் தயாரிக்கும் போட்டி (மகளிர் சத்துமிக்க பாரம்பரிய உணவுப் பதார்த்தங்களை குறிப்பாக சிறுதானியங்கள், பாரம்பரிய பயிர் ரகங்கள் அல்லது பயிர்செய்யப்படாத தாவரங்களை பயன்படுத்தி தயார் செய்யும் போட்டி), கண்டுபிடிப்பாளர்கள், பாரம்பரிய வைத்யர்களை கௌரவித்தல் போன்றன பல கிராமங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நடைபயணத்தில் தொகுக்கப்பட்ட உத்திகள் பின்வருமாறு :

மேகவர்ணத்தின் மூலிகை வைத்தியம்

இராமநாதபுர மாவட்டம் சின்ன அக்ரமேசி கிராமத்தில் (வயது 60) வசித்து வருகிறார். இவர் 3ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். இவர் நெல், பருத்தி, கத்தரி போன்ற காய்கறி பயிர்களை பயிர் செய்து வருகிறார். இவரது குடும்பத்தில் பாரம்பரியமாக வைத்யம் செய்யப்பட்டு வருகிறது. மனிதர்கள் மற்றும் ஆடுமாடுகளுக்குக் கால் ஒடிந்தால் கட்டுப் போடுதல் இவரது பிரதான வைத்தியமாகும். இவர் தனது தந்தை ஆறுமுகத்திடமிருந்து இந்த வைத்ய முறையைக் கற்றுக் கொண்டார்.

எழும்பு முறிவிற்கு கட்டு போடுதல்

இவர் உளுந்த மாவுடன் முட்டை சேர்த்து பசை போன்று தடவி கட்டு போட்டு விடுகிறார். நாள்பட்ட

எலும்பு முறிவிற்கு சுண்ணாம்புடன் முட்டை சேர்த்து பத்துப் போடுகிறார். இரண்டு நாள் கழித்து இந்த கட்டிற்கு மேல் இலுப்பை எண்ணெய் மற்றும் தென்னைமரகுடி எண்ணெய் கட்டிற்கு மேல் கீழ் பூசப்படுகிறது.

ஆடு மாடு கழிச்சலுக்கு

சந்தன வில்லை 4–5 உள்ள கரைத்துக் கொடுக்க வேண்டும். மாடு கழிச்சலுக்கு மஞ்சளை அரைத்து உள்ளே தர வேண்டும். வரகு அரிசியை அவித்து கொடுத்தால் மாடு கழிச்சல் நிற்கும்.

ஆடு அரிசி தின்றால்

மஞ்சளை அரைத்து சிறிது நீரில் கலந்து கொடுக்க வேண்டும். சாணம் வெளியே செல்வதற்கு ஓமம் ஆட்டிற்கு 50 கிராம், மாட்டிற்கு 100 கிராம், 5 வெற்றிலையுடன் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

கோமாரி நோயினால் வரும் புண்ணிற்கு

சோற்றுக்கற்றாழையுடன் உப்பு சேர்த்து பூசி விட வேண்டும்.

ஆடு, மாட்டிற்கு இளங்கொடி விழாமல் இருந்தால்

மிளகு 15ஐ தூள் செய்து நீராகாரத்தில் கலந்து கொடுத்தால் வயிற்றில் உள்ள கழிவு அனைத்தையும் வெளியே தள்ளும். ஆனைநெருஞ்சி இலையை நீராகாரத்தில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும். அல்லது எள்ளுச் செடியை அரைத்து கொடுக்கலாம்.

சினை தங்காமைக்கு

நாட்டு கோழி முட்டையை கூட்டுடன் உள்ளே கொடுக்க வேண்டும். பிறகு வேப்ப எண்ணெய் 200 மி.லி. மாட்டிற்கு உள்ளே கொடுக்க வேண்டும். இத்துடன் கத்தரிக்காய் 1/2 கிலோ நறுக்கி 3 தினங்களுக்குத் தர வேண்டும்.

மேகவர்ணம், சின்ன அக்ரமேசி கிராமம், பரமக்குடி வட்டம், இராமநாதபுரம் மாவட்டம். செல் : 9159524046

கடல்பாசி சேகரிக்கும் இராக்கம்மாளின் அனுபவங்கள்

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை சின்னமாயாகுளம் என்னும் கிராமத்தில் திருமதி. இராக்கம்மாள் (வயது 53) வசித்து வருகிறார். இவர் நித்தமும் பக்கத்து தீவுகளுக்கு சென்று கடல் பாசி சேகரித்து வருகிறார். இதனை தரகரிடம் விலைக்கு கொடுத்து தினமும் சுமார் ரூ. 400 வரை சம்பாதிக்கிறார். இப்பகுதி ஊர்களில் பெண்கள் சுமார் 1300 நபர்கள் 21 தீவுகளில் கடல்பாசி எடுப்பதில் ஈடுபட்டுள்ளனர். ஒரு வத்தலில் (சிறிய படகு) 4 பெண்கள் + ஒரு ஆண் சென்று 4–5 கி.மீ தொலைவில் உள்ள தீவுகளுக்கு சென்று சேகரிப்பர். சுமார் ஒரு டன் கட்டக்கோரை பாசி கொண்டு வந்தால் ரூ. 16000 கிடைக்கும். படகு வாடகை, டீசல் செலவு போக ரூ. 400–500 வரை ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு பணம் கிடைக்கும். சுமார் 8 இடைத்தரகர்கள் இதனை கிலோ ரூ.15 –150 வரை வாங்கி மதுரைக்கு லாரிகளில் அனுப்பி வைக்கின்றனர். சேகரிக்கப்படும் கடல்பாசி ரகங்கள்:

கட்டக்கோரை பாசி

கருப்பு சாயம் எடுக்க பயன்படும். சாயம் எடுத்த பின் உரத்திற்கு பயன்படும். ஒரு கிலோ விலை ரூ. 17.

பக்கடா கோரை பாசி

பக்கடாகோரை பாசி சாயம் எடுக்க பயன்படும். சாயம் எடுத்த பின் உரத்திற்கு பயன்படும்.

மரிக்கொழுந்து பாசி

அகர்அகர், உணவுப்பொருள், சத்து மாத்திரை செய்யவும் பயன்படும்.

அல்வா தயாரிக்க இதனை பயன்படுத்துவர். ஒரு கிலோ விலை ரூ. 17. காயவைத்து விற்றால் ரூ. 68 கிடைக்கும்.

கடல்நண்டு

விளமி, சூடை, நகரை, காரா போன்றன சேகரித்து ரூ. 80– 150 வரை / கிலோவிற்கு விற்கின்றனர்.

கணவாய் மீன் பிடிக்கும் உத்தி

கணவாய் மீன் (octopus) இனப்பெருக்கம் ஆக கொழுஞ்சி, ஆவாரம் செடியை கரையோரக் கடலில் சுமார் 8– 10 அடி ஆழத்தில் கடலில் அமிழ்த்தி விட வேண்டும். கடலின் மேல் அடையாளம் தெரிய பிளாஸ்டிக் பொருளை கட்டி மிதக்க விடுவர். இந்த செடியில் ஒரு மாதத்தில் படியும் தூள் பொருட்களை கணவாய் மீன் விரும்பி சாப்பிடும். இந்த இடத்தில் முட்டைகளிட்டு குஞ்சு பொறிக்கும். இதனால் அதிக கணவாய் மீன்களை எளிதில் பிடிக்கலாம். இந்த நுட்பத்தை பல வருடங்களாக மீனவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

ராக்கம்மாள், பாரதி நகர், சின்னமாயகுளம், இராமநாதபுரம் . செல் : 9629594871

படவேடு கருணாகரரின் இயற்கை வேளாண்மை

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தாலுகா, படவேடு கிராமத்தில் வசிக்கும் திரு. கருணாகரன் (வயது 52) 10வது வரை படித்து விட்டு இயற்கை வேளாண்மை கடந்த 10 ஆண்டுகளாக செய்து வருகிறார். இவர் சுபாஷ் பாலேகர் நடத்திய இயற்கை வேளாண்மைப் பயிற்சியில் கலந்து கொண்டுள்ளார். இவர் நெல், வாழை பயிடுகிறார். இவர் 2 வருடம் நெல் சாகுபடி செய்தால் 3 வது வருடம் வாழைக்கு மாறுவார். பயிற்சுழற்சி செய்வது சிறந்த மண்வள பாதுகாப்பு உத்தியாகும் எனக் கூறுகிறார்.

நெல்லுக்கு அடியுரமாக 15 டிராக்டர் லோடு குப்பை இட்டு, மரத்தழை, தாவரக்கழிவு, பசுந்தாள் உரமாக வயலில் நீர் விட்டு மிதிக்கப்படுகிறது. இதனால் உரம் நெல்லுக்கும் அடுத்த பயிர் போகத்திற்கும் கிடைக்கும் என கூறுகிறார்.

பயிர்களுக்கு ஜீவாமிருதத்தை தயார் செய்து உரமாக மாதம் 2 முறை வாய்க்கால் நீரில் பாய்ச்சி வருகிறார். நெல் நட்ட 25வது நாளில் ஜீவாமிருதத்தை தெளிப்பான் மூலம் தெளிக்கிறார். ஒரு லிட்டர் ஜீவாமிருதத்திற்கு 10 லிட்டர் நீர் கலந்து தெளிக்கிறார். மீன் அமினோ அமிலத்தை பூ பூக்கும் முன்னர் ஒரு தடவையும் பூ பூத்த பின்னரும் 2 வது தடவையும் சுமார் 15–20 நாட்கள் இடை வெளியில் தெளிக்கிறார். இதனால் பூக்கள் நன்கு எடுத்து காய் / மணிகள் எடை கூடும். மீன் அமினோ அமிலத்தை தயாரிக்க கழிவு மீன், வெல்லம் இரண்டும் சமபங்கு எடுத்து 30 நாட்களுக்குப் பின் வரும் திரவத்தை வடிகட்டி 10 லிட்டர் நீருக்கு 300 மி.லி கரைசல் சேர்த்து தெளிப்பான் மூலம் பயிருக்குத் தெளிக்கிறார்.

பூச்சி விரட்டி மருந்து தயார் செய்தல்

ஒடித்தால் பால் வரும் தழை (பப்பாளி, எருக்கன், வெப்பாலை, கள்ளி), கசக்கும் தழை (வேம்பு, சிறியா நங்கை, ஆடாதொடை), வாசனைத்தழை (நொச்சி, ஊமத்தை, கற்பூரவள்ளி, சித்தரத்தை) ஒவ்வொன்றும் 1 கிலோ எடுத்து மொத்தம் 20 கிலோ சேர்த்து சுமார் 20 லிட்டர் கோமியத்தில் தழை மூழ்குமாறு 15 நாட்கள் நிழலில் ஊற வைத்து விட வேண்டும். பின்னர் வடிகட்டிய கரைசலை டாங்கிற்கு 500 மி.லி கரைசலை 10 லிட்டர் நீரில் கலந்து பயிருக்குத் தெளிக்க வேண்டும்.

வாழை வாடல் நோய்க்கு

வாழைமரத்திற்கு பனாமா வாடல் நோயினால் சேதம் ஏற்படும். குலை சிறுத்து அல்லது வராமல் இருந்து விடும். இதற்கு 2–5 லிட்டர் ஜீவாமிருதக்கரைசலை ஒரு வாழைமரத்திற்கு 15 நாள் இடைவெளியில் 2 தடவை ஊற்ற வேண்டும். இவர் பயிரிடும் வாழை ரகங்களான மொந்தன் குலையில் 9–10 சீப்பும், மஞ்சள் பூவன் வாழையில் 10–12 சீப்பும் காணப்படுவதாகக் கூறுகிறார்.

கருணாகரன், 1325, மெயின் ரோடு, படவேடு, போளூர் தாலுகா. திருவண்ணாமலை மாவட்டம்.
செல் : 9843054146, 9994442699

வாழை வாடல் நோய்க்கு ஏழுமலையின் இயற்கை வேளாண்மை

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தாலுகா, படவேடு கிராமம் மல்லிகாபுரத்தில் திரு. ஏழுமலை (வயது 45) 10வது வரை படித்து விட்டு விவசாயம் செய்து வருகிறார். இவருக்கு 8 ஏக்கர் நிலம் உள்ளது. இவர் வாழை, நெல், கடலை, கத்தரி, சோளம் போன்ற பயிர் சாகுபடி செய்து வருகிறார். இவருடைய அனுபவத்தில் வாழைக்கன்றுகள் நோய் தாக்கப்பட்ட பகுதியிலிருந்து (பனாமா வாடல் நோய் தாக்கப்பட்ட விவசாயிகளின் தோட்டத்திலிருந்து தருவிக்கப் பட்டது) கொண்டு வந்து தனது தோட்டத்தில் நட்டாலும் இந்த வாடல் நோய் வருவதில்லை. இதற்கு காரணம் இவர் செய்யும் இயற்கை வேளாண்மை முறைகள்தான் என கூறுகிறார்.

இவர் கடைபிடிக்கும் முக்கிய முறைகள் பின்வருமாறு: ஜீவாமிருதம், மீன் அமினோ அமிலம், பத்திலை கசாயம், தேங்காய் மோர் கரைசல், வாழைக்கு ஊடு பயிராக காராமணி (தட்டைப்பயறு) பயிர் செய்தல் போன்றவையே.

இவர் சில ஆண்டுகளுக்கு முன்னர் பஞ்சகவ்யா தயார் செய்து பயிருக்கு தெளித்து வந்தார். இதில் நல்ல பலன் கிடைத்தது. அதே சமயம் தயார் செய்வதற்கு செலவு அதிகமானது. இதனால் இதனை கைவிட்டு விட்டார். இதற்கு பதிலாக ஜீவாமிருதம், மீன் அமினோ அமிலம் போன்றவற்றை தயார் செய்து இயற்கை வேளாண்மை செய்து வருகிறார். இவர் மீன் அமினோ அமிலத்தை நெல் போன்ற பயிர்களுக்கு 2 முறை தெளிக்கிறார். ஒரு டேங்கிற்கு 300 மி.லி. (10 லிட்டர் நீருக்கு) கலந்து தெளிப்பதால் நல்ல பச்சை நிறமும் வளர்ச்சியும் கிடைப்பதாகக் கூறுகிறார்.

வாழையில் ஊடு பயிர்

இவர் ஏலக்கி, கற்பூரவள்ளி, பூவன், பொறியல் வாழை (ஈரோடு வாழை) போன்ற ரகங்களை பயிர் செய்து வருகிறார். வாழைக்கன்றுகள் நட்ட 2–3 மாதங்களில் கன்றுகளுக்கு ஊடே கடைசி உழவில் ஓர் ஏக்கருக்கு சுமார் 20 கிலோ காராமணி விதைக்கிறார். இதில் இரு முறை காய் பறிக்கிறார். இதற்கு பின் அப்படியே பயிரை விட்டு விடுகிறார். காராமணிக்கு பதிலாக உளுந்தும் பயிர் செய்யலாம். 20 கிலோ விதைத்தால் 300 கிலோ மகசூல் கிடைக்கும். இதற்கு பின் பயிர் காய்ந்து மண்ணிற்கு உரம் தரும்.

மாட்டிற்கு தீவனம் கொடுத்தல்

கோதுமை, மக்காச்சோளம், அரிசி, சோளமாவு கலந்து கஞ்சியாக காய்ச்சாமல் பவுடராக சிறிது நீர் சேர்த்து புட்டு பதத்தில் தருவது சிறந்தது.

மகளிர் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி

கடந்த 01–06–2022 அன்று படவேடு பகுதி மல்லிகாபுரம், ராமநாதபுரம், கமண்டலாபுரம், பாலசமுத்திரம் மகளிர் குழு உறுப்பினர்களுக்கு பஞ்சகவ்யா, ஜீவாமிருதம், மூலிகைப் பூச்சி விரட்டி, அமிர்தக்கரைசல் தயாரிக்கும் முறை விளக்கப்பட்டது. இந்த பயிற்சியை திருமதி. லட்சுமி ஏற்பாடு செய்திருந்தார். இதில் திரு. ஏழுமலை கலந்துகொண்டு தனது தோட்டத்தில் இயற்கை உரம், மருந்து தயாரிப்புகளை செயல் விளக்கம் செய்து காட்டினார்.

ஏழுமலை, கொல்லைமேடு, மல்லிகாபுரம், படவேடு, திருவண்ணாமலை மாவட்டம். செல் : 9626788871

காளிமுத்தனின் கால்நடை மூலிகை வைத்யம்

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி வட்டம், நல்லாங்குடி கிராமத்தில் திரு. காளிமுத்து வயது 65 வசித்து வருகிறார். இவரிடம் 5 மாடுகள், 2 ஆடுகள் உள்ளன. இவர் பல வருடங்களாக கால்நடைகளுக்கு மூலிகை வைத்யம் அளித்து வருகிறார். இவர் பின்பற்றும் வைத்ய முறைகள் பின்வருமாறு:

கோமாரி நோயினால் ஏற்படும் புண்களுக்கு

தும்பை சாறுடன் மஞ்சள் தூள் கலந்து புண்ணில் பூச வேண்டும்.

பில்லுமாறி காய்ச்சலுக்கு

மயிர் சிலிர்த்திருக்கும் கால் நடுங்கும் இதற்கு வெற்றிலையுடன் மிளகு சேர்த்து உள்ளே கொடுக்க வேண்டும். உடம்பின் மேல் சாம்பல் தடவ வேண்டும். சாம்பிரணி புகை காட்ட வேண்டும்.

சாதாரண காய்ச்சலுக்கு

ஓம திரவம் 150 மி.லி., தேங்காய் எண்ணெய் 150 மி.லி. இரண்டையும் சேர்த்து உள்ளே புகட்ட வேண்டும்.

புழு வைத்த புண்களுக்கு

வேப்ப எண்ணெயில் சமையல்கூட புகை சேர்த்து குழைத்து புண்ணில் இட வேண்டும்.

(22.5.2022 அன்று பரமக்குடியில் உலக பல்லுயிர்பன்மயம் நாளில் நடைபெற்ற கூட்டத்தில் தொகுக்கப்பட்டது. அதே நாளில் பரமக்குடியிலிருந்து இராமேஸ்வரம் வரை அறிவைத்தேடும் நடைபயணம் துவங்கியது).

நெம்மேலி கிராம கால்நடை வைத்ய கூட்டம்

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுகா நெம்மேலி கிராமத்தில் மகளிர்குழு உறுப்பினர்கள் கால்நடை மூலிகை வைத்ய பயிற்சிக்குப்பின்னர் ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். சென்ற வருடம் (2021) அக்டோபர் நவம்பர் மாதங்களில் ஒரு வார காலம் நடைபெற்ற மூலிகை வைத்ய பயிற்சியில் பங்கு கொண்டனர். இந்த பயிற்சியை வளநாடு

தற்சார்பு வேளாண்மை உற்பத்தியாளர் குழு ஏற்பாடு செய்திருந்தது. பின்னர் பிப்ரவரி 2022ல் நெம்மேலியில் நடைபெற்ற கால்நடை வைத்ய முகாமில் மசால் உருண்டை, மத்தான் தைலம், குடற்புழு நீக்க மருந்து தயார் செய்து வைத்யம் செய்துள்ளார்கள். இந்த முகாம் கால்நடை பராமரிப்புத்துறை மருத்துவர் உதவியுடன் நடைபெற்றது.

மூக்கில் புண் வந்தால்

வெதுவெதுப்பான நீரில் மஞ்சள், உப்பு கலந்து கழுவிவிட குணமானது.

புழு வைத்த புண்ணுக்கு

ஊமத்தை இலையை அரைத்து பஞ்சு போன்ற மெத்தி புண்ணின் மேல் அப்பிவிட புழுக்கள் மேலே வர வெளியேறும். இதனால் புண் குணமாகும்.

–கஸ்தூரி, கொண்டல், ஆவாரம்பூ மூலிகைத் தொழில் குழு

கன்றின் பருவு, கட்டிக்கு

கன்றுக்குட்டி முகத்தில் பருவு கட்டியாக பரவி வந்தது. இதற்கு மத்தான் தைலம் தடவி வர விரைவில் குணமானது.

குமுதம், செம்பருத்தி மகளிர் குழு, நெம்மேலி.

தாதுப்பு கட்டியின் பலன்

ஒரு மாடு கால் இழுத்து இழுத்து நடந்து வந்தது. மற்றெரு மாட்டிற்கு எலும்பு வெளியே தெரியுமாறு மெலிந்து இருந்தது. தாதுப்புகட்டி கொடுக்க மாடு அதனை நக்கி சுவைக்கும். இதனால் சில நாட்களில் மாடு நன்றாக நடந்தது. எலும்பு தெரியாமல் சதை பிடித்தது. – ஜோதி

மாட்டுக்கு காய்ச்சல் அறிகுறி

காதைப்பிடித்துப்பார்த்தால் வெப்பம் அதிகமாக இருக்கும். இதற்கு சாம்பிராணி புகையில் ஓமம் போட்டு காட்ட விரைவில் சளி இறங்கி குணமானது.

நாய்க்கு தோல் நிறம் மாற

குடற்புழுவினால் அவுதியுறும் நாய்க்கு குடற்புழு மருந்து (வேப்பெண்ணெய் + வெள்ளைப்பூண்டு சேர்த்து காய்ச்சிய எண்ணெய்) கொடுக்க சரியானது.

–திலகவதி

கோமாரி நோய்க்கு

தத்தங்குடி விவசாயிகள் கோமாரி நோய்க்கு மருந்து கேட்டு வந்தனர். அவர்களுக்கு உள் மருந்தாக சோற்றுக்கற்றாழை, துளசி, மஞ்சள், உப்பு வெள்ளைப்பூண்டு, தேங்காய் துருவல் அரைத்துக் கொடுக்கும் முறை, புண்ணுக்கு மத்தான் தைலம் போட சொன்னோம். இவ்வாறு வைத்யம் செய்ததும் மாடுகள் விரைவில் குணமடைந்ததை எடுத்துக் கூறினர். –மகேஷ், கொண்டல்

வயிறு உப்பிசம், கழிச்சல், காய்ச்சலுக்கு

இன்று நடைபெற்ற கூட்டத்தில் முதலுதவி பெட்டியில் வைத்துக் கொள்ள கீழ்க்கண்ட பொருட்கள் சேர்த்து மருந்து தயாரிக்கும் முறை செய்து காண்பிக்கப்பட்டது. சுக்கு, கடுக்காய், ஓமம், ஆவாரம், துளசி, ஓவ்வொன்றும் 200 கிராம், இந்துப்பு, கஸ்தூரிமஞ்சள் தலா 100 கிராம் பவுடர் சேர்த்து மருந்து கலவை தயாரிக்கப்பட்டது. வயிறு உப்பிசத்திற்கு இந்த மருந்தை சோடா உப்புடனும் கழிச்சலுக்கு வெல்லத்துடனும் நீரில் கலந்து 25 கிராம் தர வேண்டும். காய்ச்சலுக்கு சுடு நீரில் கலந்து தர வேண்டும்.

இலையமுதுகூடம் கால்நடை வைத்ய அனுபவ கூட்டம்

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுகா, இலையமுது கூடம் கிராமத்தில் கால்நடை மூலிகை வைத்ய பயிற்சி கடந்த ஆண்டு 15 நாட்கள் வரை மகளிர் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சியை நபார்டு வங்கி உதவியுடன் உழவர் உற்பத்தியாளர்கள் குழு ஏற்பாடு செய்திருந்தது.

10.6.2022 நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டோர் கூறிய அனுபவங்கள் பின்வருமாறு :

மாடு சினைக்கு வர

அம்மான் பச்சரிசி இலை அரைத்து 1 டம்ளர் பாலில் கலந்து தர வேண்டும்.

தேங்காய், சீயக்காய், சின்ன வெங்காயம், வெந்தயம், பூண்டு, மஞ்சள்தூள், நாட்டுக்கோழி முட்டை கலந்து வெறும் வயிற்றில் கொடுக்க வேண்டும். இதனை சினை ஊசி போடும் முன்னர் செய்து விட்டு போட வேண்டும். இதனால் மாடு சினைபிடித்தது.

–லீலாவதி, விருட்சா தொழில் குழு, இலையமுது கூடம்.

மருதாணி இலையை 1/4 கிலோ எடுத்து அரைத்து 2 லிட்டர் நீரில் கலந்து 3 நாட்கள் கொடுக்க வலுவடிக்கும். சினைக்கு போட அறிகுறி காட்டும்.

– பத்மாவதி

காதில் புண் ஏற்பட்டால்

தும்பை இலைச்சாறு எடுத்து தேங்காய் எண்ணெய் 1/4 லிட்டரில் காய்ச்ச வேண்டும். இத்துடன் பச்சை மஞ்சள் 1, பூண்டு 4 பல்லு சேர்த்து காய்ச்சி வடிகட்டிய தைலத்தை ஒரு கண்ணாடி பாட்டிலில் வைத்துக் கொள்ள வேண்டும். இதனை ஒரு நாளைக்கு 2 வேளை 2 நாட்கள் காதில் சுமார் 5 மி.லி. அளவு ஊற்ற குணமானது.

– லட்சுமி, துளசி, தொழில் குழு, இலையமுதுகூடம்

பாரம்பரிய விதைத்திருவிழா

கடலூர் மாவட்டம், விருத்தாச்சலத்தில் விதைத் திருவிழா ஜூலை மாதம் 31ம் தேதி, 2022ல் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை செந்தமிழ் மரபுவழி வேளாண் நடுவம், தமிழ்காடு இயற்கை வேளாண்மை இயக்கம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

இவ்விழாவில் கடலூர் சார் மாவட்ட ஆட்சியர், சி. பழனி, விருத்தாச்சலம் வட்ட ஆட்சியர் ம. தனபதி வேளாண் இணை இயக்குநர் திரு. ரவிச்சந்திரன் மாவட்ட கல்வி அலுவலர் சு.சகபிரியா விருத்தாச்சல மண்டல ஆராய்சி மைய தலைவர் தி.மு. பாண்டியன், ஆந்திரமாநில விதை வல்லுநர் திரு. ராமுஆஞ்சனேயா ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் 43 கண்காட்சி அரங்குகள் : நெல், தானிய, காய்கறி, கீரை விதை ரகங்கள், இயற்கை உரங்கள், பூச்சி கொல்லி மருந்து, பத்தி, சாம்பிராணி வாசனைப் பொருள்கள், எண்ணெய், தேன், சோப்பு வகைகள், மரக்கன்றுகள், மதிப்பு கூட்டப்பட்ட தானிய உணவு வகைகள், துணிப்பை போன்றன அடங்கும். இக்கூட்டத்தில் நோயற்ற வாழ்வு வாழ இயற்கை உரங்கள் கொண்டு விளைந்த தானியம், காய்கறிகள் பயன்படுத்துதல், கருப்பு நிற அரிசி, சிவப்பு நிற அரிசியை உணவிற்கு பயன்படுத்துதல், இட்லி, தோசைக்கு ஒரே அரிசியை பயன்படுத்தாமல் 2,3 ரக அரிசிகளை கலந்து பயன்படுத்துதல், ஒவ்வொரு ரக அரிசிக்கும் ஒவ்வொரு மருந்துவ குணம் உள்ளதால் அரிசியை மாற்றி, மாற்றி சாப்பிட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. இயற்கை வேளாண்மை குறித்து செல்வக்குமாரும், ராமகிருஷ்ணனும் எடுத்துக் கூறினர். கண்காட்சியில் தானியங்களில் தூசி தட்டும் கருவியை திரு. வீரசந்திரன் அறிமுகப்படுத்தினார்.

விபரங்களுக்கு : செல் : 8870890109, 9952637722

செல்வக்குமாரின் இயற்கை விவசாயம்

கடலூர் மாவட்டம், திட்டகுடி நகராட்சி தர்மகுடிகாடு கிழக்கு தெருவில் வசிக்கும் செல்வக்குமார் (வயது 34) 10வது வரை படித்துள்ளார். இவருக்கு திருமணமாகி 3 ஆண் குழந்தைகள் உள்ளன. இவர்

தற்போது தற்காலிகமாக அரசு பஸ் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறார். இவருக்கு 1 1/2 ஏக்கர் நன்செய் நிலம் உள்ளது. இதில் நெல் பயிர் செய்து வருகிறார். இவரிடம் ராத்தி இன மாடு 1, சாகிவால் இனமாடு 1 உள்ளன. மாட்டிலிருந்து கிடைக்கும் கோமியம், சாணம் இவற்றை பயன்படுத்தி நிலத்திற்கு தேவையான பஞ்சகவ்யா, அமிர்தக்கரைசல் தயார் செய்து நிலத்திற்கு பயன்படுத்தி வருகிறார். பத்து இலை கசாயம் தயாரித்து அதை பூச்சி விரட்டி மருந்தாக பயன்படுத்தி வருகிறார்.

பூச்சிவிரட்டி தயாரிக்கும் முறை

நொச்சி, வேம்பு, பெரியாநங்கை, சிறியாநங்கை, ஊமத்தை, பிரண்டை, சோற்றுக்கற்றாழை, ஆடாதொடை, துளசி, ஓம வள்ளி ஆகிய செடிகளின் இலைகளை சம அளவு எடுத்து (மொத்தம் 10 கிலோ) நறுக்கி 20 லிட்டர் பசுமாட்டு கோமியத்தில் 15–20 நாட்கள் வரை ஊற வைக்க வேண்டும். ஊற வைத்த கரைசலை வடிகட்டி தெளிப்பான் மூலம் (15 லிட்டர் தண்ணீரில் 400 மி.லி. கரைசல்) செடி பூப்பதற்கு முன் தெளிக்க வேண்டும். இந்த கரைசலை தெளிப்பதன் மூலம் பூச்சிகள் தாக்குதல் பரவாமல் பயிரை பாதுகாக்க முடியும்.

அக்னி அஸ்திரம்

இஞ்சி, பூண்டு, மிளகாய் இவற்றை சம அளவிலும் புகையிலை சற்று குறைந்த அளவிலும் எடுத்து (மொத்தம் 1 கிலோ) அதை 10 லிட்டர் பசு மாட்டு கோமியத்தில் ஊற வைக்க வேண்டும். 2 நாட்கள் கழித்து ஊற வைத்த கரைசலை வடிகட்டி தெளிப்பான் மூலம் 15 லிட்டர் தண்ணீருக்கு 400 மி.லி. கரைசல் சேர்த்து தெளிக்க வேண்டும். இப்படி செய்வதன் மூலம் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். இதனை செடியில் பூ வைத்த பின்பு தெளிக்க வேண்டும்.

செல்வகுமார், திட்டகுடி நகராட்சி, தர்மகுடி காடு கிழக்கு தெரு, கடலூர் மாவட்டம். செல் : 9047335592

ராமகிருஷ்ணணின் இயற்கை வேளாண்மை

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தாலுகா, சிரிகுடி கிராமத்தில் வசிக்கும் திரு.ராமகிருஷ்ணன் (வயது 31) எம்.சி.ஏ., பி.எட். படித்துள்ளார். இவருக்கு திருமணமாகி 2 ஆண் குழந்தைகள் உள்ளன. இவருக்கு சொந்தமாக 4 ஏக்கர் நன்செய் நிலம் உள்ளது. இதில் இயற்கை முறையில் நெல் பயிரிட்டு வருகிறார். 2 போக நெல் அறுவடை செய்து வருகிறார். இவரிடம் 1 மாடு, 5 ஆடுகளும் உள்ளது. இவர் கடந்த 3 வருடங்களாக இயற்கை விவசாயம் செய்து வருகிறார். இவர் உழவன் கூடு என்ற விவசாய சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறார். இவர் நிலத்தில் 30 அடி ஆழத்தில் நீர் கிடைப்பதால் 100 அடி ஆழத்திற்கு ஆழ் துளை கிணறு மூலம் விவசாயம் செய்து வருகிறார்.

இயற்கை நெல் சாகுபடி

ராமகிருஷ்ணன் 3 ஏக்கரில் இயற்கை வேளாண்மை செய்து வருகிறார். மீதமுள்ள 1 ஏக்கரில் இவருடைய தந்தை ரசாயன உரம் இட்டு காய்கறிப் பயிர், பூ சாகுபடி செய்து வருகிறார்.

இவர் கிச்சடி சம்பா, கருப்பு கவுனி, தூயமல்லி போன்ற பாரம்பரிய நெல் ரகங்களை இயற்கை முறையில் பயிர் செய்து அரிசி, அவல் போன்றவற்றை தயார் செய்து 50 வாடிக்கையாளர்களுக்கு விநியோகம் செய்து வருகிறார். இவர் அரிசியை கிலோ ரூ. 80 க்கும் அவலை கிலோ ரூபாய் 100 க்கும் கொடுக்கிறார். ஆனால் இது போன்ற செயலுக்கு அதிகப் போக்குவரத்து செலவு பிடிக்கிறது எனக் கூறுகின்றார். இதனால் சொற்ப இலாபமே கிட்டும்.

இவரிடம் 10 வகையான நெல் ரகங்கள் உள்ளன.

இவர் கடைப்பிடிக்கும் இயற்கை வேளாண்மை உத்திகள் பின்வருமாறு:

நெல்லுக்கு அடியுரம்

இவர் மாட்டு எரு மற்றும் கடலைப்புண்ணாக்கு, வேப்பம்புண்ணாக்கு அடியுரமாக இடுகிறார். கடலைப்புண்ணாக்கு 50 கிலோ, வேப்பம் புண்ணாக்கு 20 கிலோ, இவைகளை இடித்து ஒன்றாகச் சேர்த்து வைத்துக் கொள்கிறார். இந்த புண்ணாக்கு கலவையை இரண்டாகப்பிரித்து பாதியை அடியுரமாகவும், மீதிப்பாதியை நெல் நட்ட 11/2 மாதத்தில் மேலுரமாக இடுகிறார்.

அமுதக்கரைசல் உரம் தயாரித்தல்

இவர் 200 லிட்டர் கொண்ட ட்ரம்மில் 20 கிலோ மாட்டுச்சாணம், 10 லிட்டர் கோமியம், 2 கிலோ

வெல்லம் கரைத்து ஊற வைத்து 3 நாட்களுக்குள் உரக்கரைசலாகப் பயன்படுத்துகிறார். இதை ஓர் ஏக்கருக்கு நீர்ப்பாசன நீரில் கலந்து விடலாம். இதனை அவ்வப்போது 10 நாட்கள் இடைவெளியில் நீரில் கலந்து விடுகிறார். இத்துடன் நிலத்து மண் மற்றும் உளுந்த மாவு சேர்த்து ஜீவாமிர்தக் கரைசல் தயார் செய்து பயன்படுத்தினார். தற்சமயம் அமிர்தக் கரைசல் மட்டுமே தயார் செய்து பயன்படுத்துகிறார்.

பஞ்சகவ்யா உரக்கரைசல் தெளித்தல்

பஞ்சகவ்யா தயார் செய்ய சாணம் 5 கிலோவை 1/2 கிலோ நெய்யுடன் கலந்து 3 நாள் வைத்து பின்னர் மாட்டு கோமியம் 2 லிட்டர், பால் 2 லிட்டர், தயிர் 2 லிட்டர், வெல்லம் 1/2 கிலோ, வாழைப்பழம் – 1 டஜன் சேர்க்க வேண்டும். வெல்லத்தை 3 லிட்டர் நீரில் கலந்து சேர்க்க வேண்டும். பின்னர் அனைத்தையும் சேர்ந்த கலவையை மேலும் 18 நாட்கள் அப்படியே ஒரு டிரம்மில் வைத்து தினமும் 5 நிமிடம் நன்றாக குச்சியால் கலக்க வேண்டும். 21 நாட்கள் கழித்து பயிர் நிலங்களில் ஸ்பிரேயர் கொண்டு தெளிக்கலாம். இரண்டு மாத வயதுடைய பயிருக்கு 10 லிட்டர் நீருக்கு 200–250 மி.லி கலந்து தெளிக்கிறார்.

பூச்சிக்கட்டுப்பாடு

நெல் வயலில் ஒரு ஏக்கருக்கு, பறவை அமர 20 கட்டைகளை ஆங்காங்கே ஊண்றிவைத்திருக்கிறார். இதில் பறவைகள் உட்கார்ந்து கொண்டு பூச்சிகளைப் பிடிக்கும்.

வேப்பங்கொட்டை கரைசல் தயாரிக்கும் முறை

பத்து கிலோ வேப்பங்கொட்டையை தட்டி 10 லிட்டர் கோமியத்தில் 10 நாட்கள் ஊற வைத்து பின் வடிகட்டி 10 லிட்டர் தண்ணீருக்கு 250 மி.லி. வேப்பங்கொட்டை கரைசலை கலந்து தெளிப்பான் மூலம் தெளித்தால் பூச்சிகள் பயிரை தாக்குவதில்லை.

வேப்பெண்ணெய் கரைசல் 100 மி.லி. ஐ 10 லிட்டர் நீரில் கலந்து இத்துடன் சோப்புக் கரைசல் சேர்த்து ஓர் ஏக்கருக்கு 5 டேங்க் அடிக்கிறார். வளர்ந்த பயிருக்கு 8 டேங்க் அடிக்கிறார். ஐந்து இலைக் கரைசல் தயார் செய்து பயிருக்கு 2 முறை தெளிக்கிறார். விவசாயிகள் இயற்கை முறையில் காய்கறி வீட்டுத் தோட்டம் அமைப்பதற்கு காய்கறி விதைப் பாக்கெட் விநியோகிக்கிறார்.

ராமகிருஷ்ணன், செரிகுடி, கும்பகோணம் தாலுகா தஞ்சாவூர் மாவட்டம் . செல் : 7810093050

தூசி நீக்கும் கருவி

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் தாலுகா, புதுக்குப்பத்தில் வசிக்கும் வீரசந்திரன் (வயது 62) 5 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு மனைவி, 3 மகன்கள், 3 மகள்கள் உள்ளனர். வீரசந்திரன் நெய்வேலி நிலக்கரி சுரங்க ஊழியர்களுக்கான பண்டகசாலையில் பணி செய்து தற்போது வேலையிலிருந்து ஓய்வு பெற்று விவசாயம் செய்து வருகிறார். இவருக்கு சொந்தமாக 1/2 ஏக்கர் மானாவாரி நிலம் மட்டும் உள்ளது. அதில் உளுந்து, தட்டை பயறு, பாசி ஆகியவற்றை பயிர் செய்து வருகிறார். இவரது சொந்த முயற்சியில் தூசி தட்டும் கருவி ஒன்றை வடிவமைத்துள்ளார். இக்கருவியில் கொட்டப்படும் அரிசி, மற்ற தானியங்கள் அதில் இயங்கும் காற்றாடி மூலம் தூசி தட்டப்பட்டு தூசி நீக்கப்பட்ட அரிசி, தானியங்கள் மற்றொரு இடத்திற்கு வந்து சேருகிறது. இவர் வடிவமைத்துள்ள இந்த அமைப்புக்கு ரூ. 6,000 செலவாகும். அதிக எண்ணிக்கையில் கருவி உற்பத்தி செய்யும் போது இதன் விலை குறையும் என்கிறார். இந்த கருவியை மின்சாரம் அல்லது இரு சக்கர வாகன என்ஜின் மூலம் பெல்ட் கொண்டு இணைத்தும் இயக்கலாம்.

வீரசந்திரன், புது குப்பம், ஆலடி அஞ்சல்,
விருத்தாசலம் தாலுகா. கடலூர் மாவட்டம்.
செல் : 8760783050

குறைந்த செலவில் எளிதில் நெல்லில் களை எடுக்கும் கருவியை தயார் செய்தல்

தேவையான பொருட்கள்: 1) 20 காஜ் கட்டுகம்பி (Gauge binding wire) ஒரு கிலோ, 2) 2 அங்குலம் சட்டம் 6 அடி 1, 7 அடி –1, 3 அடி –2, 3) 4 அங்குல ஆணி –10, 4) 1 அங்குல பைப், 10 அடி T joint - 1, end cap -3(அடைப்பான்) 5) சணல் தேவையானளவு.

செய்முறை: 3 அடி நீளமுள்ள கம்பிகளாக நறுக்கி அதில் 3 கம்பிகளை எடுத்து அதை இரண்டாக மடித்து சடை பின்னுவது போல முறுக்க வேண்டும். அதன் நுனியில் ஆறு முனைகளையும் 3 அங்குள நிலத்திற்கு முறுக்காமல் நீட்டிவிட வேண்டும். இவ்வாறு செய்த கம்பிகளை (6) ஆறு அடி நீளமுள்ள சட்டத்தில் ஓர் அங்குல இடைவெளியில் சொருகி கொரடாவின் மூலம் தளர்வு இல்லாமல் இறுக்க வேண்டும். டி வடிவமாகவும், வி வடிவமாகவும் சட்டங்களை படத்தில் உள்ளது போல் ஆணிகளை கொண்டு தைத்து கம்பிகளைப் பொருத்திய புதிய சட்டத்தில் தைக்க வேண்டும். இடுபொருட்களை இடுவதற்கும் உரங்களை பிவிசி பைப் – ஐ டி (டி) வடிவில் செய்து இந்தக் கருவியிலேயே பொருத்தம் செய்தால்,ஒரேநேரத்தில் களையும் எடுத்துக் கொள்ளலாம். இடுபொருட்களை சீரான அளவில் பயிர்களுக்கும் இடலாம். இடுபொருட்களை அந்தக் குழாயில் ஊற்றி 2 முனைகளையும் மூடியைக் கொண்டு அடைத்து விட்டால், குழாயில் உள்ள ஓட்டையின் வழியாக இடுபொருட்கள் சீரான இடைவெளியில் பயிர்கள் மீது நனைத்துவிடும்.

பூச்சிக் கட்டுப்பாடு : நெய்பயிரில் உள்ள இலை சுருட்டுப் புழுவும் பூச்சிகளின் முட்டைகளும் இதன் மூலம் கட்டுப்படும். நெல் பச்சை கட்டியதிலிருந்து சூழலுக்குத் தகுந்தாற்போல் 3 அங்குல தண்ணீர் நிலத்தில் இருக்கும் நிலையில் இந்தக் கருவியை பயன்படுத்தலாம். தானாக முளைக்கும் களைகளை நீக்கும். ஒன்றிலிருந்து இரண்டு அங்குலம் வரை சேற்றை கிளறிவிடும். வேரூன்றிய நெற்பயிர்களை இந்தக் கருவியானது பாதிக்காது.பவர் வீடர், கோனாவீடர் முதலியவற்றைப் பயன்படுத்தும் பொழுது நடக்கின்ற தூரமும் காலமும் மிகவும் அதிகம். அதற்குத் தேவையான ஆட்களும், கூலியும் மிகவும் அதிகம். கோனாவீடரில் ஒரு உருளை உள்ளது. பயன்படுத்தும் பொழுது தோராயமாக ஒரு ஏக்கருக்கு 14 கிலோ மீட்டர் நடக்க வேண்டியுள்ளது. கோனோ வீடர் காட்டிலும் எடைக் குறைவாக இருப்பதால் பெண்கள் இதை எளிதாகப் பயன்படுத்தலாம்.

இந்த களை எடுக்கும் கருவியை தாமாக தயாரிக்க முடியாதவர்கள் திரு. சுசீந்தரை அனுகி விலைக்கு வாங்கி கொள்ளலாம். தரத்தை பொறுத்து இதன் விலை ரூ. 500–1000 க்கு கிடைக்கும்.





ஒரு அங்குல பிவிசி பைப்பை களை எடுக்கும் கருவியில் Tவடிவில் பொருத்தவும். கிடைமட்டத்தில் உள்ள இரண்டு முனைகளையும் மூடிவிடவும். சீரான ஒரு அங்குல இடைவெளியில் பழுக்க காய்ச்சிய கோணி ஊசியின் முனையால் கிடைமட்ட பிவிசி பைப்பில் துளையிடவும்.

மூ. சுசீந்தர், விருத்தாசலம், கடலூர் மாவட்டம்
செல் : 9952637722

அடித்தள கண்டுபிடிப்பாளர்கள் கருத்தரங்கம் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்கள் சங்கத்தின் 22 வது ஆண்டு பொதுக்குழு கூட்டம்

14.8.22 அன்று ஞாயிற்றுக்கிழமை அடித்தள கண்டுபிடிப்பாளர்கள் கருத்தரங்கம் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்கள் சங்கத்தின் 22வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் கோயம்புத்தூர் நரசிம்ம நாயக்கன்பாளையம் வெற்றிவேல் நகரில் சமுதாய தொழிற்பட்டறைக்கூடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தை அடித்தள கண்டுபிடிப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் திரு. டி. என். வெங்கட் ஏற்பாடு செய்திருந்தார். இக்கூட்டத்தில் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் பிற மாநிலத்திலிருந்து 30 நபர்கள் கலந்து கொண்டனர். சிறப்பு அழைப்பாளராக திருச்சி பெல் நிறுவன பொது மேலாளர் (ஓய்வு) திரு. நாகராஜ் கலந்து கொண்டு கண்டுபிடிப்பாளர்களுக்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்கினார். சேவா நிறுவனத்திலிருந்து திரு. விவேகானந்தன், திரு. ஜெயபாண்டி கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்திற்கு வந்திருந்தவர்களை திரு. டி.என். வெங்கட் வரவேற்புரை நல்கினார். முன்னாள் செயலாளர் திரு. பி.ஏ. சேகர் நெசவில் பாவு போடும் கருவியை பற்றி கூறினார். சங்கத்தின் பொருளாளர் தேங்காய் உரிக்கும் கருவியை விளக்கினார்.

நெல்லில் களை எடுக்கும் கருவியை அவரவர்களே செய்து கொள்ளும் முறை திரு. சுசீந்தர் விளக்கினார். இக்கூட்டத்தில் சங்கத்தின் ஆண்டு அறிக்கை, வரவு செலவு விவரம் போன்றன பகிர்ந்து கொள்ளப்பட்டன.

தொகுப்பு : ஜெயபாண்டி, சேவா

நீராகாரத்தின் மகிமை

2019ம் ஆண்டு முதல் நீராகாரம் என்றும் புளிச்ச தண்ணீர் என்றும் அழைக்கப்படும் இந்த ஆகாரம் குறித்த ஆய்வை எய்ம்ஸ் அறிவியல் நிறுவனம் நடத்தி வருகிறது. ஆய்வில் நாம் பழங்காலத்தில் இருந்தே நம் முன்னோர்கள் அருந்தி வந்த நீராகாரம் அல்லது புளிச்ச தண்ணீரில் குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கும், நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கும் உதவுக் கூடிய கொழுப்பு அமிலங்கள் உள்ளன. அவை அன்றைய நாளுக்குத் தேவையான ஆற்றலைக் கொடுக்கும். பழைய சோற்றில் இருந்து கிடைக்கும் நீராகாரம் உடலுக்கு புத்துணர்ச்சி தருவதோடு, உடலுக்கு குளிர்ச்சி தரும் ஓர் உணவாகும். காலையில் எழுந்தவுடன் வெறும் வயிற்றில் நீராகாரத்தை குடிக்க வேண்டும். இதனால் மலச்சிக்கல் நீங்கும்.

நீராகாரத்தில் வைட்டமின் பி6, வைட்டமின் பி 12, போன்ற சத்துகள் அடங்கி உள்ளன. அத்தோடு நீராகாரத்தை தொடர்ந்து அருந்துவதால் கை, கால், இடுப்பு, மூட்டு, வலிகள் போன்ற வாத நோய்கள் வருவது தடுக்கப்படும். மேலும், அஜீரணம், வாந்தி, பித்தம், மயக்கம், ருசி தெரியாமை, பசி எடுக்காமை போன்ற பிரச்சனைகளில் இருந்து நம்மைக் காத்துக் கொள்ளலாம். இதில் நல்ல பாக்டீரியாக்கள் நிறைந்து உள்ளன. இந்த பாக்டீரியாக்கள் உடலில் உள்ள செரிமானக் கோளாறுகளை போக்க உதவும்.

–இணையதள செய்தி

பாரம்பரியமாக பின்பற்றப்படும் மூலிகை வைத்யம் ..... சென்ற இதழ் தொடர்ச்சி...

மூச்சு இரைப்பு, ரத்தக்காசம், ஆஸ்துமா

1.தூதுவளை, கண்டங்கத்திரி இலை, நல்ல துளசி இலை, ஆடாதொடை இலை, ஆதண்டை இலை, வெள்ளை இண்டு இலை, இம்பூரம் இலை எல்லாவற்றையும் சம அளவு எடுத்து நிழலில் காயப்போட்டு இடித்து தூளாக்கி தினமும் 100 கிராம் அளவில் வெள்ளாட்டுப்பால் அல்லது நீராகாரத்தில் கலந்து 3 வேளை சாப்பிட வேண்டும். நீண்ட நாட்களாக இந்த நோய் இருப்பின் 15 நாட்கள் வரை சாப்பிட வேண்டும்.

பத்தியம் : கருவாடு, கத்தரி, மீன், பயறு வகைகள் போன்றவை மருந்து சாப்பிடும் காலம் முடியும் வரை சாப்பிடக் கூடாது.

பத்தியம் முறிக்க : 1. வெற்றிலையும், ஓமமும் கசக்கி தலையில் தேய்க்க வேண்டும். 2. எண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும்.

2.நிலவாகைச் சூரணத்தை, கரிசலாங்கண்ணி கண்டங்கத்திரி சாற்றில் 1 ஸ்பூன் அளவு காலை, மாலை உண்டு வர காச நோய், சயம், இளைப்பு நோய் தீரும் .

வைத்யர் : மீ.சுப்புராஜ், வள்ளலார் சித்தார்ந்த சித்தகம், அகமுடையார் மக்கள் மன்றம், சின்னமனூர், தேனி மாவட்டம்.

3.ஆஸ்துமாவுக்கு சீரகம் 15 கிராம், கொத்தமல்லி விதை 15 கிராம், முற்றிய வேப்பிலை 15 கிராம், வில்வ இலை 15 கிராம், அத்தி இலை 15 எண்ணிக்கை ஆகியவற்றை புதிய மண் பானையில் இட்டு ஒன்றரை லிட்டர் தண்ணீர் சேர்த்து முக்கால் லிட்டராக வற்றும் வரை கொதிக்க விட்டு வடிகட்டிக் கொள்ள வேண்டும். காலை வெறும் வயிற்றில் 100 மில்லி கசாயம் அருந்த வேண்டும். இந்த கசாயத்தை 4 நாட்களுக்கு ஒரு முறை புதிதாக தயாரித்துக் கொள்ள வேண்டும். சுமார் 20 தினங்கள் வரை ருசித்துக் குடித்து வர வேண்டும். காலை வேளையில் விரும்பும் உணவை பாதி அளவில் சாப்பிட வேண்டும். மதிய உணவிற்கு முக்கால் பாகம் உணவு, கால் பாகம் நீர் மற்றும் சமைத்த காய்கறிகளாக இருக்க வேண்டும். இரவு உணவுக்கு அரை வயிறு சாப்பிட வேண்டும்.

பேன், பொடுகு

1.குழந்தைகளுக்கு பொடுகு, படை சிரங்குகள் தீர குறுக்கு முத்து விதை 100 கிராம் இடித்து அதனுடன் குப்பைமேனி சாறு 100 மி.லி சேர்த்து தேங்காய் எண்ணெய் 200 மி.லி.யுடன் கலந்து மஞ்சள் சேர்த்து காய்ச்சி தலை முதல் பாதம் வரை தேய்த்து வெந்நீரில் குளிப்பாட்ட நோய் நீங்கும்.

2.பொடுதலை இலையை அரைத்து தலையில் தடவ வேண்டும். இலை, காய்களை துவையல் வைத்து சாப்பிட வேண்டும்.

வைத்யர் : சுபஸ்ரீ விஜய், ஆழ்வார்திருநகர், சென்னை.

2.பேன் தொல்லை நீங்க: பெண்களின் தலையில் பேன் தொல்லை நீங்க பசும்பாலில் மிளகை ஊற வைத்து அரைத்து தலைக்கு தேய்த்து ஊற வைத்து குளிக்க வேண்டும்.

வைத்யர் : குமார், குருவம்பட்டி, சோளிங்கநல்லூர் அஞ்சல். திருச்சிமாவட்டம்

2..1 கைப்பிடியளவு மிளகு நன்கு அரைத்து தலையில் தேய்த்து அரைமணி நேரம் ஊற வைத்து குளிக்க வேண்டும்.

வைத்யர் : கே.பத்மாவதி, காந்தி மியூசியம், மதுரை

2.2 வசம்புத்தூள் 10 கிராம் நல்லெண்ணெய் 50 மி.லி. கலந்து தலையில் பூசி சிறிது நேரம் கழித்து குளிக்க வேண்டும்.

வைத்யர் : ஜேக்கப், நாசரேத், தூத்துக்குடி.

வெள்ளைப்படுதல்

1. பெண்களுக்கு வெள்ளைப்படுதலுக்கு ஓரிதழ் தாமரை, வெள்ளருகு, பற்படகம் 10 கிராம் அரைத்து ஆட்டுப்பாலில் அல்லது மோரில் 3 நாட்கள் சாப்பிட வேண்டும். .

வைத்யர்: எஸ். சாமியாத்தாள், மாரியம்மன் கோவில் தெரு, புஞ்சைக்காளை மங்கலம் கிராமம், ஈரோடு மாவட்டம்.

2. சுத்தம் செய்த நேர்வாளம் 10 கிராம் எடுத்துக் கொண்டு அவற்றை 2 எலுமிச்சம் பழச்சாறு விட்டு

அரைத்து கொள்ள வேண்டும். அத்துடன் சுத்தம் செய்து பொடி செய்யப்பட்ட பூரம் 2 கிராம் , 1/2 லிட்டர் பசும்பால், 1/2 லிட்டர் தேங்காய் பால் ஆகியவற்றை ஒரு லிட்டர் விளக்கெண்ணெயுடன் சேர்த்து, கொதிக்கச் செய்து, எண்ணெயை வடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இவற்றில் 5 மில்லி எடுத்து தினமும் காபியில் கலந்து குடிக்க வேண்டும். அசைவ உணவு சேர்க்கக் கூடாது. ரசம் சாதம் சாப்பிட வேண்டும். இதனால் வயிறு சுத்தமாகி விடும். அதன் பிறகு தும்பை இலை, ஆவாரங்கொழுந்து, அழுஞ்சில் இலை மூன்றிலும் 10 கிராம் வீதம் சேர்த்து அரைக்க வேண்டும். இவற்றை நெல்லிக்காய் அளவு பால் அல்லது இளநீரில் கலந்து சாப்பிட வேண்டும். உணவில் உப்பு சேர்க்கக் கூடாது. வெள்ளைபாடு மீண்டும் வராமலிருக்க கீழ்க்கண்ட லேகியம் செய்து சாப்பிட்டு வர வேண்டும். 3. கருங்காட்டுக் கொடி இலை, விடத்தழை இலை, சத்திசாரணை இலை, வெள்ளருகு போன்றவற்றை நிழலில் காய வைத்து பொடி செய்து வெந்நீரில் / வெள்ளாட்டுப் பாலில் கலந்து 3 வேளை 5–10 நாட்களுக்கு சாப்பிட வேண்டும்.

பத்தியம் : கருவாடு, கத்தரி, மீன், பயறு வகைகள் போன்றவை மருந்து சாப்பிடும் காலம் முடியும் வரை சாப்பிடக் கூடாது.

பத்தியம் முறிக்க : 1. வெற்றிலையும், ஓமமும் கசக்கி தலையில் தேய்க்க வேண்டும். 2. எண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும்.

வைத்யர்: வி.சாமிக்காளை, சல்லிக்கோடாங்கிபட்டி, பாலமேடு வழி, வாடிப்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம்.

3. இரத்த வெட்டை (ஆண் / பெண்) : சோற்று கற்றாழை மடல் 6 எடுத்து சட்டியில் வீரம் 1 கிராம், பூரம் 1 கிராம், சீனி 10 கிராம் போட்டு வெள்ளைத் துணியில் கட்டி தொங்க விட்டு கீழ் ஒரு பாத்திரத்தை வைத்து இதில் வடியவிட வேண்டும். காலையில் ஒரு டம்ளர் சாப்பிட வேண்டும். கறி, கருவாடு தவிர்க்க வேண்டும்.

4. பெண்கள் வெள்ளை, வெட்டை சூடு எரிச்சல் தீர எலுமிச்சம்பழம், வெங்காயம், நல்லெண்ணெய் சம அளவு 20 மி.லி வீதமும் பனங்கற்கண்டு தேவையான அளவு சேர்த்து ஒரு நாளுக்கு 2 வேளை காலை, மாலை சாப்பாட்டிற்கு முன்பு 3 நாட்கள் சாப்பிட தீரும்.

5.பெண்களுக்கு வரும் பெரும்பாட்டு நோய்க்கு : மஞ்சணத்தி இலை ஒரு பிடி, எருமை மோர் 1/4 படியுடன் அரைத்து கலக்கி வடிகட்டி சாப்பிட தீராத பெரும்பாடு தீரும். வீலி இலை (15) மென்று 40 நாளைக்கு சாப்பிட ஒருவருக்கு தெம்பும், வேகமும் கூடும்.

6.வெட்டை நோய் : யானை நெருஞ்சியின் விதை (கொத்தாக காய்த்தது) 25ஐ எடுத்து முதல் நாள் மாலையில் நீரில் ஊற வைக்க வேண்டும். பின் மறுநாள் காலை உரலில் இடிக்க வேண்டும். பின் அம்மியில் அரைக்க வேண்டும். ஒரு எலுமிச்சம் பழம் அளவு எடுத்து அதை பசுவின் மோர் மற்றும் எலுமிச்சை சாறுடன் கலக்கி தினமும் காலையில் 7 நாளைக்கு 7 வேளை மட்டும் சாப்பிட வேண்டும்.

7. உஷ்ணத்துக்கு : இளநீரில் யானை நெருஞ்சி இலையை 2 மணி நேரம் ஊறவைத்து கலக்கி சாப்பிட வேண்டும்.

8.வெள்ளை வெட்டை : ஈஸ்வர மூலிகை தழை, நன்னாரி வேர் சம அளவு அரைத்து கொட்டை பாக்களவு எடுத்து வெள்ளாட்டுப் பாலுடன் காலை, மாலை என இரண்டு நாட்கள் கொடுக்க வேண்டும். உப்பு, புளி நீக்கி உணவு உண்ண வேண்டும். வைத்யர் : எஸ்.அண்ணாமலை, சின்னவேடபட்டி, தும்பல்பட்டி போஸ்ட் பனைமரத்துப்பட்டி வழி, சேலம் மாவட்டம்

9.பித்தப்பை அடைப்பு / வெள்ளைப்போக்கு : முதல் நாள் இரவு 1 லிட்டர் தண்ணீரில் யானை நெருஞ்சி இலையை ஊற வைத்து காலையில் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். பின்பு சோற்றுக் கற்றாழை சோறு சாப்பிட வேண்டும். தொடர்ந்து 1 மாதம் செய்தால் குணமாகும்.

வைத்யர்: கே. பத்மாவதி, காந்தி மியூசியம், மதுரை.

ரத்த சோகைக்கு அல்லது இரத்த அணுக்கள் கூட்ட

1. குப்பைமேனி இலையை அரைத்து சுண்டக்காய் அளவு உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்து வைத்து கொண்டு காலை மாலை சாப்பாட்டிற்கு முன்பு 40 நாட்கள் சாப்பிட ரத்த சோகை தீரும்.

வைத்யர்: ச.பன்னீர்செல்வம், பொன்நகர், தங்கம்மாள்புரம் அஞ்சல். கடமலைக்குண்டு வழி, தேனி மாவட்டம்

2.சிலர் தூக்கமின்மையாலும் நரம்புத்தளச்சியாலும் கஷ்டப்படுகிறார்கள். இவர்களுக்கு உடம்பிற்கு தெம்பினை கொடுத்து இரத்த அணுக்கள் கூட கீழ்க்கண்ட தயாரிப்பை சில நாட்கள் அருந்தி வர வேண்டும். சுண்டக்கடலை 30, பாதாம்பருப்பு 4, அத்திப்பழம் 4, பேரீச்சம்பழம் 4, உலர்ந்த திராட்சை 20 இவை அனைத்தையும் ஒரு டம்ளர் நீரில் இரவில் ஊறப்போட்டு காலையில் அருந்தலாம். ஊறிய பழங்களை (கசடு) மென்று தின்று விட வேண்டும். இதனை 2 வாரங்கள் அருந்தி வரலாம். கொள்ளு, அரிசி இரண்டையும் வறுத்து பின் காய்ச்சிய கஞ்சியில் கொத்தமல்லி, புதினா, வெங்காயம், கறிவேப்பிலை சேர்த்து சாப்பிட உடம்பில் இரும்பு சத்து கூடும்.

வைத்யர்: ஜி. முகமது உசைன், எண்– 9/5, இளங்கோ தெரு, ஜோதி நகர், அரக்கோணம்.

3. திராட்சை டானிக் தயார் செய்து அருந்த வேண்டும். கருப்பு திராட்சை பழச்சாறு 10 லிட்டர், வெள்ளை கல்கண்டு 7 கிலோ, வால் மிளகு 100 கிராம், சாதிக்காய் 100 கிராம்.

செய்முறை: முதலில் கல்கண்டை இடித்து தூள் செய்து ஒரு பெரிய வாயகன்ற பாத்திரத்தில் போட்டு தெளிந்த சுண்ணாம்பு நீர் விட்டு காய்ச்சவும் கிளறி விட்டுக் கொண்டே கையில் ஒட்டும் பதம் வந்தவுடன் திராட்சைபழ சாற்றை ஊற்றி நன்கு கிளறவும். நுரை கொண்டு பொங்கி வரும்போது இடித்து தூள் செய்து வைத்திருந்த வால்மிளகு, சாதிக்காய் தூள்களைப் போட்டு கிளறவும். நன்கு கொதித்து கம்பி பதம் வந்தவுடன் இறக்கிவிட்டு வேறு பாத்திரத்தில் வடி கட்டி எடுத்து விடவும் .

பயன்கள் : இது ஒரு இரும்புச்சத்து டானிக். இது ரத்தத்தில் உள்ள சிவப்பணுக்களை அதிகப்படுத்தும். நோய் எதிர்ப்பாற்றலை கொடுக்கும். குழந்தைகள் காலை, மாலை 2 வேளை 1 ஸ்பூன் வீதமும் பெரியவர்கள் 2–3 ஸ்பூன் அளவு காலை, மாலை சாப்பிட்டு வர உடல் பலப்படும்.

வைத்யர்: ஆர். கிரிதரன், 10, இளங்கோ தெரு, வினாயகர் நகர், பசுமலை, மதுரை – 4

4.மஞ்சள் கரிசாலை, நெல்லிவத்தல், மணத்தக்காளி, புளிச்சக்கீரை, அகத்திக்கீரை, செம்பருத்தி சமபங்கு எடுத்து உலர்த்தி பொடி செய்து வைத்துக் கொள்ள வேண்டும். இந்த பொடியை 10 கிராம் எடுத்து நீரில் கலந்து கசாயம் செய்து குடிக்க வேண்டும்.

வைத்யர்: ஆன். விக்டோரியா, எண்:27, அய்யனார் நகர், புதுக்கோட்டை – 622 001

5. நிலவாகைச் சூரணத்தை திராட்சைப் பழச்சாறுடன் கலந்து அருந்தி வர இரத்தம் விருத்தியாகும்.

வைத்யர் : மீ. சுப்புராஜ், வள்ளலார் சித்தார்ந்த சித்தகம், அகமுடையார் மக்கள் மன்றம், சின்னமனூர், தேனி மாவட்டம்

6.உடல் எடை கூட : தோல் நீக்கிய பாதாம் பருப்பு 15, கொட்டை நீக்கிய பேரீச்சை 15 , உலர் திராட்சை 30, கேரட் 2 ஆகியவற்றை மிக்சியில் அரைத்து அதனுடன் ஒரு எலுமிச்சம் பழச்சாறு, தேன் மற்றும் தேங்காய்ப்பால் ஒரு மூடி கலந்து காலை உணவாக அருந்த வேண்டும். தொடர்ந்து 48 நாட்கள் சாப்பிட்டால் 15 நாட்களில் 4 கிலோ எடை கூடும். நண்பகலில் காய்கறி கீரையுடன் சாப்பாடு முடித்த பிறகு அரை மணிநேரம் ஓய்வு எடுக்க வேண்டும்.

வைத்யர்: கே. பத்மாவதி, காந்தி மியூசியம், மதுரை

ஏர்வாடி சேகரின் கால்நடை வைத்யம்

இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி வட்டாரம் ஏர்வாடி கிராமத்தில் திரு. சேகர் (வயது 52) வசித்து வருகிறார். இவர் தானம் அறக்கட்டளையில் வயலக குழு உறுப்பினராக உள்ளார். இவரிடம் 10 மாடுகள் உள்ளன. இவர் 18 வயதில் இருந்து கால்நடைகளை பராமரித்து வருகிறார். இவர் நாட்டு வைத்தியத்தில் மாடுகளின் நோய்களை கண்டறிந்து மூலிகைகளைக் கொண்டு குணமாக்கி வருகிறார். இவர் பின்பற்றும் வைத்தியமுறைகள் சில பின்வருமாறு :

கால் காணை, வாய் காணை நோய்க்கு

5 தும்பை செடியினை இடித்து பிழிந்து சாறு எடுத்து 1 சங்கு அளவு எடுத்து அதனுடன் மஞ்சள் பொடி சிறிதளவு கலந்து மாட்டின் கால்களில் தடவி வந்தால் கால் காணை நோய் தீரும். வாய் பகுதி புண்ணிலும் தடவலாம். கால்நடைகளுக்கு வாய் காணை நோய்க்கு சோற்றுக் கற்றாழையினை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி வாழைப்பழத்தில் வைத்து 100 மி.லி நல்லெண்ணெய் கலந்து வாய் வழியாக செலுத்தவேண்டும்.

மாடு இரை எடுக்காமல் இருந்தால்

தேங்காய் எண்ணெய் 150 கிராம் மற்றும் ஓம வாட்டர் 150 கிராம் கலந்து ஒரு வேளை மட்டும் கொடுத்தால் இரை எடுக்கும்.

பிள்ளுமாரி காய்ச்சல் நோய்க்கு

மிளகு – 2 கிராம், வெற்றிலை – 5 இவைகளை மடித்து கொண்டு கால்நடைகளின் வாய் வழியாக கொடுக்க வேண்டும். கால்நடைகளின் மேல் சாம்பல் தடவ வேண்டும். சாம்பிராணி புகை காட்ட வேண்டும்.

கால்நடைகளுக்கு கொம்பு ஒடிந்தால்

கால்நடைகளுக்கு கொம்பு ஒடிந்தால் அடுப்புக்கரியுடன் வேப்பெண்ணெய் 100 மி.லி. கலந்து ஒடிந்த பகுதியில் தடவுதல் வேண்டும். சீனி, வெள்ளை சுண்ணாம்பு சிறிதளவு இரண்டையும் கலந்து துணியினால் கட்டி விட்டால் அவை கெட்டித் தன்மை அடைந்து புழு வைக்காமல் பாதுகாக்கப்படும். இதனால் கொம்பு புண் ஆறிவிடும். கொடிக்கல்லி பால் கொண்டு கொம்பு ஒடிந்த பகுதியிலும் தடவலாம்.

எலும்பு முறிவு அல்லது கால் ஒடிதல்

முட்டை 4, உளுந்து 1/4 கிலோ அல்லது அரிசி மாவு 1/4 கிலோ, இவைகளை கலந்து நன்கு பிசைந்து கால்நடைகளின் கால்களில் வெள்ளை துணி கொண்டு கட்டுதல் வேண்டும். இதற்கு முட்டை பத்து என்று கூறுவர்.

கண்ணில் நீர் வடிந்தால்

சிறிதளவு சுக்கு, ஏலக்காய், கிராம்பு இவற்றை வாயில் மென்று துணியில் வடிகட்டி கால்நடைகளின் கண்ணில் சொட்டுவிட வேண்டும்.

கால்நடைகளுக்கு சதை பிரண்டால்

திருகுகல்லி பால், அல்லது பிரண்டை சாறு எடுத்து பாதித்த பகுதியில் தடவினால் சதை பிரண்டல் குணமாகும்.

கால்நடைகளுக்கு இரை அடைத்தால்

வாழைப்பழம் கொடுக்க வேண்டும். சிக்கல் தவிர்க்கப்படும்.

கால்நடைகளுக்கு கொழுப்பு குறைக்க

மிளகாய் 25 கிராம் அரைத்து நல்லெண்ணெய், 1/4 லிட்டரில் கலந்து கொடுத்தால் கொழுப்பு குறையும்.

உண்ணிகளுக்கு

சோற்று கற்றாழை சீவி கால்நடைகளின் மேல் தடவினால் உண்ணி பரவுவது குறையும்.

இரத்தக் கட்டுக்கு

தென்னை மரக்குடி எண்ணெயை சூடுபடுத்தி இரத்தக்கட்டு உள்ள இடத்தில் தேய்த்தால் குணமாகும். இரத்தக் கட்டு குறையும்.

மடி நோய்க்கு

ராமக்கட்டி, எலுமிச்சம் பழம் சாறு எடுத்து அதனுடன் ராமக்கட்டியை தேய்த்து பால் மடியில் தேய்த்தால் மடி நோய் குணம் அடையும். இம்முறையை 3 நாட்கள் பயன்படுத்த வேண்டும். மடி வீக்கம் அதிகமாக காணப்பட்டால் சுண்ணாம்பு எலுமிச்சை பழச்சாறுடன் கலந்து பத்து போடவும்.

மடி கட்டி நோய்க்கு

மடி காம்புகளில் ஊசி முனை கொண்டு (ஈர்க்கு) துவாரம் இடுவதால் மடிக்கட்டியை குறைக்கலாம்.

மாடு சினை பிடிப்பதற்கு

கொண்டைக் கடலையை 200 கிராம் ஊற வைத்து முளைப்புதிறன் வரும் போது அந்த கடலையை தினமும் தீவனமாகக் கொடுத்தல் வேண்டும். பசுக்களை காளைக்கு போட்ட பின் முட்டை,

வேப்பெண்ணெய் கலந்து பசுக்களுக்கு கொடுக்க வேண்டும்.

வயிறு உப்பிசம் அல்லது வயிறு ஊற்றம் தவிர்க்க

நல்லெண்ணெய் 1/4 லிட்டர் ஊற்றினால் 5 நிமிடம் கழித்து தன் கழிவுகளை வெளியேற்றும். இதனால் வயிறு உப்பிசம் குறையும். சோடா உப்பு 100 கிராம் வெண்ணீர் கலந்து போட்டாலும் குணமாகும். சுக்கு, மிளகு இடித்து வாய் வழியாக கொடுத்தால் கழிச்சல் கொடுக்கும். வயிறு செரிமானம் அடையும்.

கழிச்சலுக்கு

தயிர் 50 மி.லி. மற்றும் சிறிதளவு மஞ்சள் கலந்து கொடுத்தால் கழிச்சல் நின்று விடும்.

கால் ஒடிந்தால்

முசுமுசுக்கை இலை அல்லது கோவை இலை அல்லது வேலி பருத்தி இலையுடன் நல்லெண்ணெய் இடித்து கால்களில் கட்டினால் கால் குணமாகும்.

ஒரு வாரத்துக்கு கட்டு களையாமல் வைத்து பாதுகாக்க வேண்டும். ஒரு வாரம் கழித்து தண்ணீர் தெளித்து பாதுகாக்க வேண்டும்.

மாட்டு கொம்பு குத்தியதால் ஏற்படும் புண்ணிற்கு

பிரண்டை தண்டு இடித்து வேப்பெண்ணெய் கலந்து சூடு செய்து ஒத்தடம் கொடுத்தால் புண் ஆறும்.

மாடு தண்ணீர் குடிக்காமலிருந்தால்

வெல்லம் 250 கிராம், இஞ்சி 250 கிராம் இடித்து வாய் வழியாக செலுத்தவும். இதனால் நாவு வறட்சி உண்டாகி நீர் பருகும்.

சிறு கன்றுகுட்டி கழிச்சல் நோய்

தென்னை குறும்பை அல்லது சப்போட்டா காய் இதனை அரைத்துக் கொடுத்தால் (துவர்ப்பாக) கொடுத்தால் கழிச்சல் நிற்கும்.

கால்நடைகளுக்கு வயிற்றுப் பூச்சிக்கு

வேப்பங்கொட்டை ஊற வைத்த நீரினை கொடுத்தால் கீரி பூச்சி இறக்கும்.

கால்நடைகளுக்கு குளம்புகளில் புண் ஏற்பட்டால்

வேப்பெண்ணெய் 100 மி.லி எடுத்து இதில் சூடத்தை (3) நசுக்கி மாட்டின் குளம்புகளில் தடவினால் ஈ ஒட்டாது. இதனால் புண் குணமாகும்.

இளங்கொடி போடாமல் இருந்தால்

சந்தனம் 100 கிராம் எடுத்து 1 லிட்டர் தண்ணீரில் கலந்து கொடுக்க வேண்டும். அல்லது நாயுருவி இலை காய்ந்த செடியை தீயினால் கருக்கி புளித்த தண்ணீர் கலந்து மாடுகளுக்கு கொடுத்தால் இளங்கொடி விழும்.

கொம்பு நன்கு வளர

மாடுகளுக்கு 2 வது மாதத்தில் கொம்புகளை பிடுங்கி விட்டால் நன்றாக வளரும்.

மாடுகள் சினை பிடித்ததை கண்டறியும் முறை

கண் கருமை கொடுக்கும். உடம்பில் குளிர்ச்சி தன்மை காணப்படும். பெண் உறுப்பின் ஒரு புறம் தன்வாலை ஒதுக்கும். பால் குறையும். சினை பிடிக்காமல் இருந்தால் 21 நாட்களில் முடை போன்ற திரவத்தை வெளிப்படுத்தும்.

மாடுகளுக்கு இயற்கை மூலிகை வைத்யம் செய்தால் ஒரு மாட்டிற்கு மாதத்திற்கு ரூ. 100 மட்டுமே செலவாகும். அதே சமயம் கால்நடை மருத்துவர் உதவி கொண்டு ஆங்கில வைத்யம் பார்த்தால் ரூ. 500 செலவாகும். 5 மாடுகள் கொண்ட பண்ணைக்கு மாதத்திற்கு ரூ. 2000 செலவு குறையும் எனக் கூறுகிறார்.

அப்துல்கரீமின் ராக்கெட் அடுப்பு



கேரளா மாநிலத்தில், கொச்சி நகரில் திரு. அப்துல் கரீம் (வயது 57) என்பவர் 40 வருடங்களாக சொந்தமாக ஒரு லேத் கூடம் நடத்தி வருகிறார். இவர் கொதிகலன்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான பல உபரி பொருட்களை உற்பத்தி செய்து தருகிறார். கொரோனா முழு அடைப்பு நேரத்தில் இவருக்கு புதிய யோசனை உருவானது. ஒரு நாள், மின்சாரம் மற்றும் எல்.பி.ஜீ கேஸ் (சமையல் எரிவாயு) உபயோகம் நின்றால் என்னவாகும் என நினைத்தார். சமையலுக்கு வேறு ஏதாவது அடுப்பு உள்ளதா என எண்ணினார். மேலும் பாரம்பரிய அடுப்புகள் உள்ளபோதும் பொதுமக்கள் இதனை உபயோகப் படுத்தத் தயக்கம் காட்டி வருகின்றனர். பாரம்பரிய அடுப்பிலிருந்து அதிகப்படியான புகை வெளிவருவதே இதற்குக் காரணமாகும். இந்த சமயத்தில்தான் ராக்கெட் அடுப்பை உருவாக்க நினைத்தார்.

இந்த புகையில்லா அடுப்பானது 1850 களில் இருந்த பிரிட்டிஷ்காரர்களின் முறையை அடிப்படையாகக் கொண்டது. இதில் செங்குத்தாக பொருத்தப்பட்ட சிம்னி விளக்குகள் உள்ளன. கொடைக்கானல் மற்றும் மூணாரின் பல தோட்டங்களில் இத்தகைய அடுப்புகள் உபயோகத்தில் உள்ளதைக் கண்டார். அடுப்பு எரியும் பகுதியில் தீச்சுவாலைகள் வருவதற்கு முன்னாலேயே முழுவதுமாக எரியும் தன்மை கொண்டதாக இந்த ராக்கெட் அடுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அப்துல்கரீமின் அடுப்பு வகையானது 4 மீட்டரிலான மெல்லிய உலோகத்தகடுகள் மற்றும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தகடுகள் ஓவன் சேம்பரில் (அடுப்பின் அறைகள்) வைத்து பொருத்தப்பட்டுள்ளது. இவரின் கம்பெனி மற்றும் அருகில் உள்ள சந்தைகளிலேயே இந்த மூலப் பொருட்கள் எளிதாகக் கிடைக்கிறது. விறகுக் கட்டைகள், தென்னை மர மட்டை மற்றும் பேப்பர் கழிவுகளை இவரின் ராக்கெட் அடுப்பில் உபயோகப்படுத்தலாம். இதனால் எரிபொருள் மற்றும் புகை வெளியேறுதல் 80 சதவீதம் வரை குறையும். நண்பர்கள் உறவினர்கள் மற்றும் அருகில் வசிப்பவர்களிடமிருந்து விரைவாக ஆர்டர்களைப் பெற்றுத் தயாரித்துக் கொடுக்கிறார்.

எளிதாக எடுத்துச் செல்லும் வசதி கொண்ட இந்த ராக்கெட் அடுப்பானது 4 வித மாடல்களில் கிடைக்கிறது. சிறப்பம்சம் கொண்ட இந்த அடுப்பின் விலை ரூபாய் 20,000 மற்றும் 60 கிலோ எடை கொண்டது. சந்தையில் கிடைக்கும் சாதாரண வகை ராக்கெட் அடுப்பானது பொதுவாக சமைக்கவும், பொரிப்பதற்கும் ஏற்றதாகவும் ரூ 6500 விலையிலும் 35 கிலோ எடை கொண்டதாகவும் உள்ளது. இதன் அடிப்படை மாடலின் விலை ரூ. 5000 மற்றும் 30 கிலோ எடையும் கொண்டது. எளிதில் தூக்கிச் செல்லும் நான்காவது வகையானது நீர் பேக்கேஜ் அடுப்பு ரூ. 7000 விலை மற்றும் 20 கிலோ எடை கொண்டதாக உள்ளது. அப்துல் கரீம் இந்தக் கண்டுபிடிப்பை மேலும் நவீனப்படுத்தி விற்பனையை கூட்ட அகமதாபாத்திலுள்ள கியான் என்ற அமைப்பு SIDBI சிட்பி என்ற வங்கி மூலம் கடன் தொகை ரூ. 1,70,000 பெற்றுத்தந்துள்ளது.

கே.ற. அப்துல் கரீம், அலிசா மகால், கீழக்கரை, அரசு இணையேச் விடுதி மகால், தீரக்ககீகரா

கொச்சி – 682021, கேரளா, செல் : 9562402265

வாசகர் வட்டம்

கிணற்றில் இருந்து தண்ணீர் மோட்டாரை எடுக்கும் கருவி

சில ஆண்டுகள் தொடர்ந்து கிணற்றின் அடி மட்டத்தில் மோட்டாரை விட்டு விடுவதால் கிணற்றின் சேற்றில் மோட்டார் மாட்டி கொள்கின்றது. அதை எடுக்க சாதாரண கயிறு கட்ட அதை இழுக்க முடிவதில்லை. அப்போது இந்த கருவி பயன்படுகின்றது. இந்த கருவி டிராக்டர் 3 பாயின்ட் லிங்கில் பொருத்தி எங்கு வேண்டுமானலும் எடுத்து செல்ல ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இதை கிணற்றின் மிக அருகாமைக்கு கொண்டு செல்ல முடியும். அதன் 40 ஜெக்சன் பைப்பை நீட்டவும் முடியும். இதனால் மோட்டாரின் கயிற்றை சுவற்றில் மோதாமல் இழுக்க முடியும். மேலும் இதில் வைத்துள்ள வாம்கிர் அமைப்பு மோட்டாரை நடு கிணற்றில் கூட தொங்க வைக்கலாம் எந்த பிரேக்கும் இல்லாமல் இதை இயக்க ஒரு ஆள் மட்டும் போதும். கிணற்றில் கிரமன்ட் கலவை ஆழத்திற்கு எடுத்து செல்லும் பைப். பி.வி.சி 6'' பைப்பை தேவையான நீளத்திற்கு (20'–40') எடுத்து ஒட்டி கொள்ள வேண்டும். அதன் அடியில் 5' விட்டு 3/8'' ஒரு நீளமான போல்ட்டை ஓட்டை போட்டு மாட்டி கொள்ள வேண்டும். அதே போல் மேல் மட்டத்திலும் ஒரு போல்ட்டை போட்டு கொள்ள வேண்டும். அதை இரண்டு கயிற்றால் கட்டி 60 டிகிரி கோணத்தில் தேவையான இடத்தில் தொங்க வைத்து கொள்ளலாம். மேல் மட்டத்தில் இரண்டாக வெட்டிய பைப்பில் L சேப்பில் பொருத்தி கலவையை அதில் கொட்டி கீழே கொண்டு போக வசதியாக வைத்து கொள்ள வேண்டும். இதன் மூலம் கொட்டிய கலவை பாதியாக வெட்டிய பைப்பில் இருந்து நீண்ட பைப்பில் விழுந்து அது மேஸ்திரி இருக்கும் இடத்திற்கே போய் விடும். தேவைப்பட்டால் ஒரு டம்ளர் தண்ணீர் ஊற்றி

கொள்ளலாம். இவ்வாறு செய்வதால் ஆட்களின் எண்ணிக்கை குறைகிறது. மேலும் வேலைப்பளு குறைக்கபடுகின்றது. ஆபத்து குறைகிறது. வேலை நேரம் குறைகின்றது பாதுகாப்பு அதிகரிக்கின்றது.

தன்ராஜ், பெரியபூக்காடு, பேளுக்குறிச்சி வழி நாமக்கல் மாவட்டம்–637 402. செல் : 90800 83246

உடம்பில் நோய் எதிர்ப்பு சக்தி உண்டாக

கொரோனா உலகெங்கும் வாட்டி பல உயிர்களை வாழ வழியில்லாமல் பல குடும்பங்கள் கஷ்டமான சூழலுக்கு தள்ளிவிட்டன. பல இன்னல்கள் மற்றும் பணம் இழப்பு மகன், மகள், அம்மா, அப்பா, அண்ணன், தங்கை உற்றார் உறவினர் என பல தலைமுறைகளை இழந்து சற்று தான் ஒரு நிம்மதி மூச்சு விடலாம் என்று தயங்கி தயங்கி வாழ்வை தொடருகிறோம். நாம் நம் உணவில் மிக முக்கியமாக பிரண்டை வாரத்தில் இரண்டு நாட்கள் கறிவேப்பிலை, மல்லி இலை, புதினா இலை, உப்பு சேர்த்து துவையல் அரைத்து சாதம் மற்றும் காலை உணவில் இட்லிக்கு தொட்டு சாப்பிட்டால் கொரோனா என்ற நோய் நம்மை என்றுமே அண்டாது. நெஞ்சில் உள்ள சளி அதன் காரணமாக ஏற்படும் மூச்சுத்திணறல் முற்றிலும் இதனை சாப்பிடும் போது நாம் தினமும் காலை கடன் செல்லும் போது சளி, மலத்துடன் வெளியேறி விடும். மேலும் சளிக்கு சிறந்த மருந்து வெற்றிலை, ஜீனி, பசுநெய் மூலிகை துவையல் போல அரைத்து சிறு சிறு உருண்டையாக காலை, மாலை என மூன்று நாட்கள் சிறு உருண்டைகள் மற்றும் சுடு தண்ணீர் சாப்பிட்டால் சளி அண்டாது. நமது உடலுக்கு எதிர்ப்பு சக்தி மற்றும் நீர் சத்து குறையும் போது சில நோய்கள் நம்மை அறியாமலே வந்து விடும். இதற்கு தினமும் உணவாக புடலங்காய், பூசணிக்காய், பீர்க்கங்காய் சேர்த்து வர வேண்டும். 30 வகையான கீரைகளில் தினமும் ஒன்றை அதில் முக்கியம் முருங்கைக்கீரை + பருப்பு + 1 நாட்டு முட்டை சேர்க்க வேண்டும். கீரையை நன்கு வாலையில் சின்ன வெங்காயம் சேர்த்து நன்கு வதக்கிய பின்பு அத்துடன் சிறு பருப்பு (துவரம்பருப்பு) + முட்டை மூன்றும் சேர்த்து பொரியல் செய்து சாப்பிடலாம். நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகும்.

நா. தனசேகரன், 2/ஏ1 அக்ரஹாரம், சூலமங்கலம், பசுபதி கோவில் அஞ்சல், தஞ்சாவூர் – 614206
செல் : 6380701690

தென்னையில் குரும்பை கொட்டுவது நிற்க

2022 ஏப்ரல்–ஜூன் இதழில் தேனி மாவட்டம், கம்பம் ஹேமாலெட்சுமி தென்னை மரத்தில் குரும்பை உதிர்வதை தவிர்க்க வழிகேட்டிருந்தார். இதற்கு என்னுடைய வழிமுறையைபகிர்ந்து கொள்கிறேன்.

முதலில் தென்னை மரத்திற்கு மண் அணைக்க வேண்டும். பின்பு வாய்க்கால் பதித்து தண்ணீர் நிற்கும் அளவிற்கு நீர் பாய்ச்ச வேண்டும். மிக முக்கியம் நாக்கு அரணை என்ற எலி போன்ற சிறிய வாலுடன் கூடிய நாக்கு அரணை பல மரங்களில் ஏறி தென்னம் குருத்து முற்றும் குரும்பை, சிறிய சுரக்கக் கூடிய இளநீர் காய் இவற்றினை தனது பற்களால் சுரண்டி குடித்து விடும். அதற்கு உடனடியான தீர்வு கல் உப்பு ஒரு மரத்துக்கு 1 பாக்கெட் + மஞ்சள் தூள் 1 பாக்கெட், இதன் இரண்டையும் கலந்து மரம் ஏறுபவர்களிடம் கையில் கொடுத்து ஒவ்வொரு மரமாக தென்னங்குருத்து மற்றும் குரும்பை மற்றும் தென்னங்குலைகள் மிக கொஞ்சம் கொஞ்சமாக அமுக்கி 15 நாட்களுக்கு ஒரு முறை என இரண்டு தடவை வைக்க வேண்டும். இதனால் தென்னை மரங்கள் அதிக அளவில் காய்ப்பு மற்றும் குரும்பை கொட்டுவது நின்று விடும்.

நா. தனசேகரன், 2/ஏ1 அக்ரஹாரம், சூலமங்கலம், பசுபதி கோவில் அஞ்சல், தஞ்சாவூர் – 614206
செல் : 6380701690

ராக்குமுத்துவின் மூலிகை வைத்யம்

நான் இராமநாதபுரம் மவட்டம், உச்சிப்புளி வட்டம், வாணியகுளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு ஒரு மகள் உள்ளார். எனது 12 வயதிலிருந்து மூலிகை வைத்தியம் செய்து வருகிறேன். இந்த வைத்திய முறையை எனது பாட்டியிடம் இருந்து கற்றுக் கொண்டேன். நாய்க்கடி மற்றும் விஷக்கடி, கை, கால் பிடிப்பு போன்றவற்றிற்கு மந்திரித்து திருநீறு கொடுத்து சரி செய்வேன். பெண்கள் கர்ப்பம் தரித்தால் அவர்கள் வயிற்றில் எண்ணெய் விட்டு குழந்தை நலமுடன் உள்ளதா அல்லது ஏதேனும் குழந்தைக்கு பிரச்சனை உள்ளதா என்பதை சொல்லி விடுவேன். இதனை எனது குலதெய்வத்தின் அருளால் செய்து வருகிறேன்.

மனிதர்களுக்கு கட்டி வந்தால்: உடம்பில் ஏதேனும் கட்டி கிளம்பினாலோ அல்லது நகசுத்தி ஏற்பட்டாலோ, கம்பு அரிசியை உடைத்து அதனை வேக வைத்து

சிறிது கம்மஞ் சோறு எடுத்து அதனுடன் கோவை இலைச்சாறு சிறிது எடுத்து அந்த சோற்றுடன் கலந்து நகச்சுத்தி அல்லது புறப்பாடு ஏற்பட்ட இடத்தில் வைத்துக் கட்டினால் குணமாகிவிடும்.
ஆடு மாடுகளின் விஷக்கடிக்கு: வேலிபருத்தி இலை 250 கிராம் இலையை இடித்து சுத்தமான வெள்ளைத் துணியில் வைத்துப் பிழிந்து சாறு எடுத்து 100 மி.லி உள்ளே கொடுக்க வேண்டும். பிறகு அந்த நசுக்கிய இலையை பாதிக்கப்பட்ட ஆடு அல்லது மாட்டிற்கு உடம்பு முழுவதும் தேய்த்து விட்டால் விஷம் இறங்கி விடும்.
பெண்களுக்கு மார்பில் மாராணி ஏற்பட்டால் கறிவேப்பிலை இலை சிறிதளவு, உப்புக்கல் 3, மிளகு 3 சேர்த்து அரைத்து மாராணி ஏற்பட்ட இடத்தில் குணமாகும் வரை போட வேண்டும்.
பூச்சி பல் வலிக்கு சிறியாநங்கை இலை சாறு 2 சொட்டு எடுத்து நாக்கில் படாமல் பூச்சிப் பல்லில் விட்டால் பூச்சித் தொந்தரவு இருக்காது.
குழந்தைக்கு சளி பிடித்தால் : துளசி, தூதுவளை, சின்ன வெங்காயம் ஒன்று, சீரகம் சிறிதளவு எடுத்து அம்மியில் வைத்து தட்டி அந்த சாறு எடுத்து அதனை ஒரு சங்கு கொடுத்தால் சளி சரியாகும்.
முதுகு பிடிப்பு ஏற்பட்டால் : தென்னை மட்டையை முதுகில் உருட்டி மந்திரித்து சரி செய்து விடுவேன்.
ஆடு, மாட்டிற்கு கழிச்சல் ஏற்பட்டால் சுத்தமான தேன் 5 சொட்டு, தண்ணீர் 50 மி.லி. இரண்டையும் நன்றாக கலந்து அத்துடன் ஒரு எலுமிச்சை பழம் பிழிந்து கழிச்சல் ஏற்பட்ட கால்நடைகளுக்குக் கொடுத்தால் கழிச்சல் சரியாகும். இதனை நான் ஒரு சேவையாகவே செய்து வருகிறேன்.

ராக்குமுத்து,வாணியகுளம், இராமநாதபுரம் மாவட்டம்
செல்: 9159375890

ஊர் கிணறு புணரமைப்பு

திருவண்ணாமலை மாவட்டம், ஆடையூர், வலசைதுருவம், நார்ச்சாம்பட்டி, அம்பேத்கர்நகர், நாயக்கனூர், செம்பியன்மாதேவி என பத்து ஊர்களில் மூடி கிடக்கும் உபயோகப்படுத்தாத கிணறுகளை புனரமைத்து வருகின்றேன். நான் கட்டிடகலை படிப்பு முடித்து விட்டு குக்கூ சிவராஜ் அவர்களின் வழிகாட்டுதலின் படி ஊர் கிணறு புணரமைப்பு இயக்கத்தை ஆரம்பித்துள்ளேன்.

..... தொடர்ச்சி 23ம் பக்கம் பார்க்கவும்.

ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்பு பாடல்

(பாடல் மெட்டு : கண்ணன் எங்கள் கண்ணனானம்)

பண்ணை எங்கள் பண்ணையாம்
பாடும்குயில் பண்ணையாம்
மண்ணைக் காக்கும் பண்ணையாம்
அன்னைப்பசு பண்ணையாம் (பண்ணை)

பயிர் செழிக்கும் பண்ணையாம்
பாலும்பழமும் கொழிக்குமாம்
உயிர்காக்கும் பண்ணையாம்
ஊருக்கெல்லாம் நன்மையாம் (பண்ணை)

அருமையான சூழலில்
ஒருங்கிணைந்த பண்ணையாம்
அரியவகை மூலிகை – தரும்
ஆரோக்ய பண்ணையாம் (பண்ணை)

குடும்பத் தொழில் பண்ணையாம்
குறைக்கும் வேலை கருவியாம்
இடுபொருட்கள் குறைவிலே
ஈடுகட்டும் கரைசலாம் (பண்ணை)

உரச் செலவு இல்லையாம்
ஊறுநஞ்சு இல்லையாம்
வரவு செலவு பார்த்தாலே – தரும்
வருமானம் பண்ணையாம் (பண்ணை)

தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் நடத்திய மகளிர் குழு உறுப்பினர்களுக்கான ஒருங்கிணைந்த பண்ணை தொகுதி பயிற்சியில் பாடப்பட்ட பாடல் இது.
படத்தில் பார்வையிடப்பட்ட பண்ணை :
செங்கல்பட்டு மாவட்டம், உத்திரமேரூர் தாலுகா, குன்னவாக்கம் கோவிந்தராஜ் பண்ணை.

கோவிந்தராஜூலு செல் : 9787775266

குழந்தையின்மை வைத்யம்

மலைவேம்பு 1 கைபிடி எடுத்து அம்மியில் வைத்து நைசாக அரைத்து உருண்டையாக செய்து தலைக்குளித்து முதல் நாள், முதல் 3ம் நாள் வரை காலையில் ஒரு வேளை கொடுக்க வேண்டும்.

தவிர்க்க வேண்டியவை : அசைவ உணவுகள் மீன் கருவாடு, இனிப்பு பலகாரங்கள் (சீனி) எண்ணெய் அதிகம் சேர்க்க கூடாது. – காவேரியம்மாள், 55/எப். காவனூர் அஞ்சல், இராமநாதபுரம்.

யார் உண்மையான வைஷ்ணவன்?

காந்திஜிக்கு பிடித்த நரசிம்ம மேத்தா இயற்றிய ''வைஷ்ணவ ஜனதோ'' என்ற பாடலின் தமிழாக்கம் (பாடல் மெட்டு– தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும்)

பார்க்கும் துயரம் பிறரானாலும்
பணிந்தே சேவை செய்வானாம்
வாக்கினில் இல்லா அஹங்காரம்
வாழும் மனிதனே வைஷ்ணவனாம்

இன்பதுன்பம் சமநிலை கொண்டு – பிற
இல்ல மாதர் தாயென கண்டு
வான்புகழ் வாய்மை வைராக்கியித்தாலே
வாழும் மனிதனே வைஷ்ணவனாம்

வாழுமுயிர்கள் தன்னுயிராய்
வணங்கி வாழ்வான் தன்னியல்பாய்
நாளும் யாரும் புண்படாது
வாழும் மனிதனே வைஷ்ணவனாம்

மாயா மோகம் நெருங்கிட அஞ்சும்
மகிழும் தீர்த்தங்கள் கூடி கொள்ளும்
வாயினில் தவழும் இராமநாமம்
வாழும் மனிதனே வைஷ்ணவனாம்

காம கோபம் விட்டவனாக
கபட நாடகம் அற்றவனாக
சேமம் சேர்ப்பான் தலைமுறையாக
சேரும் வைஷ்ணவன் ஒருவராலே

தமிழாக்கம் : பெ.விவேகானந்தன், சேவா

மகா தசகவ்யம் – குளியல் சோப்

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் நகரில் 16.7.2022 கிரீன் அக்ரி கிளப் சார்பில் வேளாண்மை மாநாடு நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜே.ஜி பிறின்ஸ் மற்றும் நகராட்சி தலைவர் திரு. நசிர் கலந்து கொண்டனர். வள்ளியூர் வட்டார மகேந்திரகிரி பாரம்பரிய விவசாயிகள் சங்க செயலாளர் மகேஸ்வரன் அவர்கள் ''நஞ்சில்லா பயிர் நமக்கெல்லாம் உயிர்'' என்ற தலைப்பில் உரையாற்றினார். நாஞ்சில் விவசாய சங்கத்தின் திரு. பழநி அவர்கள் ''கலப்பு பயிரும், கால்நடை வளர்ப்பும்'' என்ற தலைப்பில் உரையாற்றினார். ஒயிட் இகோ கழிவு மேலாண்மை லிமிடெட்டின் திரு. சிவகுமார் இயற்கை மரபு சாரா எரிசக்தி என்ற தலைப்பில் பேசினார். இந்நிகழ்ச்சியை வினிதா மரச்செக்கு ஆலை இயக்குநர் திரு. தே. கிளாட்சன் ஏற்பாடு செய்திருந்தார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதியம் பாரம்பரிய உணவு வழங்கப்பட்டது. இதில் மகாதசகவ்யம் அறிமுகம் செய்யப்பட்டது. இந்த சோப்பை காவல் கிணறு கிருஷ்ணராஜாவுக்கு சனிக்கிழமை 16.7.22 வழங்கப்பட்டது. 20.7.22 அவரை சந்தித்தேன். அவர் 4 நாள் அதை பயன்படுத்தி உள்ளார். அவருக்கு பல ஆண்டுகளாக இருந்த பரு (எல்லா மருத்துவத்தையும் பயன்படுத்தி சரியாகாத நிலை) சரியாகிவிட்டது. அவர் மனைவி குளித்ததும் உடலில் வெள்ளையாக செல் தெரியும். இந்த சோப்பை பயன்படுத்திய 4 நாளில் அது மாறி விட்டது என்றார். 21 நாள் ஆன பஞ்சகவ்யம் இரண்டு பங்கும் (நாட்டு மாட்டு சாணம், சிறுநீர், பால், தயிர், நெய், கடலைமாவு, நாட்டு சர்க்கரை, வாழைப்பழம், இளநீர், பழைய கஞ்சி தண்ணீர்) 15 நாள் ஆன மகா மூலிகைபூச்சிவிரட்டி (சோற்றுகற்றாழை, பிரண்டை, கள்ளி, அரளி, ஊமத்தை, துளசி, தும்பை, துத்தி, குப்பைமேனி, பப்பாளி, வேம்பு, சீதா, புங்கன், ஆடுதின்னாப்பாளை, உண்ணிச்செடி, நாயுறுவி, ஆணைநெறிஞ்சி, கறிவேப்பிலை, தொட்டாற்சிணுங்கி, கொழுஞ்சி, ஆவாரம், நல்லமிளகு, இஞ்சி, பூண்டு, மிளகாய், வேப்பங்கொட்டை, சுண்ணாம்பு, யாழ்ப்பாண புகையிலை, சாணம், காட்டாமணக்கு, ஒட்டும் முள் இவைகளை ஒரு பேரலில் போட்டு அது மூழ்கும் அளவு நாட்டு மாட்டு கோமியம் ஊற்றியது) ஒரு பங்கும் சேர்த்து மேலும் 21 நாள் பஞ்சகவ்யா முறையில் காலை, மாலை கலக்கி வர கிடைப்பது மகாதசகவ்யம். இதோடு கல் செக்கு தேங்காய் எண்ணெய் சேர்த்து மேலும் 48 நாள் ஆன பின்பு கிடைப்பது மகா தசகவ்யம் குளியல் சோப் ஆகும்.

மகேஸ்வரன், வள்ளியூர். செல் : 6379283634

ஐந்து கோள்கள் ஆட்சி செய்வதால் தென்மேற்கு பருவகாற்று மூலம் நாடெங்கிலும் நல்ல மழை



சுபகிருது வருடம் நல்ல மழை பொழியும் என வாக்கிய பஞ்சாங்கத்தில் கூறப்பட்டுள்ளது. இதற்கு ஏற்றாற் போல் தமிழ்நாடு மற்றும் பிறமாநிலங்களில் மழை குறிப்பாக தென்மேற்கு பருவ மழை அதிகம் பெய்துள்ளது. இதற்கு கோள்களின் நிலைப்பாடு பார்த்து இது சாத்தியமே என காரைக்குடி காளைராசன் கூறுகிறார். இவர் கூறும் விளக்கம் பின்வருமாறு:

சங்க காலத்தில் கூடல் என்ற மதுரையில் வைகை நதி ஓடியது. அந்நாளில் ஒரு நாள் பெருமழை பெய்து வையை நதி பெருக்கெடுத்துக் கரைகளை உடைத்துக் கொண்டு பாய்ந்து ஓடியுள்ளது. அன்றைய நாளில் வாழ்ந்த நல்லந்துவனார் என்னும் சங்கப்புலவர் கோள்நிலைகளைக் கணித்துள்ளார். வைகை வெள்ளப்பெருக்கு எடுத்த சமயம் ஐந்து கோள்கள் ஆட்சி பெற்று இருந்தன என்றும், சந்திர கிரகணமும் நிகழ்ந்தது என்றும் பாடியுள்ளார். இந்தப் பாடல் பரிபாடலில் 11 வது பாடலாக உள்ளது. இவரது பாடலில் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என 5 கோள்கள் ஆட்சி பெற்று, அவைகளில் சொந்த வீடுகளில் நிலை பெற்றிருந்தன என்று பதிவு செய்துள்ளார். இதே கோள்களின் நிலைப்பாடு ஆனி 18 (02.07.2022) சனிக்கிழமை மற்றும் ஆனி 19 (03.07.2022) ஞாயிற்றுக் கிழமை ஆகிய இரண்டு நாட்களில் மீண்டும் இதைப் போன்றதொரு கோள்நிலைநிகழ இருக்கிறது. மேற்கண்ட 5 கோள்களுடன் சந்திரனும் சேர்ந்து மொத்தம் 6 கோள்கள் ஆட்சி பெற இருக்கின்றன.

வரும் நாட்களில் காலை சூரியன் உதயமாகும் முன், அதிகாலை 5 மணிக்கு முன்னதாக வானைப் பார்த்தால் கோள்கள் எல்லாம் அணிவகுத்து வரிசையாகத் தோன்றுவதை நாம் நம் வெறும் கண்களால் காணலாம்.

1. கிழக்கே அடிவானில் புதன் 2. சற்று மேலே வெள்ளி, 3. அதற்கும் சற்று மேலே செவ்வாய், 4. தலைக்கு மேலே வியாழன், 5. வியாழனுக்கு சற்று மேற்கே சனி என 5 கோள்களும் வரிசையாகவிண்ணில் அடுத்தடுத்து அதனதன் வீடுகளில் ஆட்சியில் இருப்பதைக் காணலாம்.

மேலேயுள்ள படத்தில் கண்டவாறு 6 கோள்களையும் அதனதன் கோணத்தில் தெளிவாகக் காணலாம். கோள்கள் அனைத்தும் நட்சத்திரங்கள் போன்று தெரியும். ஆனால் நட்சத்திரங்கள் போன்று மினுமினுக்காமல் திடமான ஒளியுடன் தெரியும்.

சங்காலத்தில் 5 கோள்கள் ஆட்சி பெறும் போதே அவ்வளவு மழை பெய்தது என்றால், 6 கோள்கள் ஆட்சி பெறும் இந்நாளில் பெருமழை பெய்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என்று கருத வேண்டியுள்ளது. இந்த இரண்டு நாட்களில் பெருமழை பெய்யுமா? வைகை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கரைகளை உடைத்துக் கொண்டு கரையோரம் உள்ள ஊர்களில் வெள்ளம் பாயுமா? அல்லது நல்லந்துவனார் பாடியது போன்று இல்லாமல் இந்நாளில் சூரிய சந்திரர் இடம் மாறியுள்ள காரணத்தினால் வெள்ளப்பெருக்கு ஏற்படாமல் போகுமா? காத்திருந்து காண்போம்.

வைகையில் புதுப் புனல் பெருகி வருவதையும், அந்தப் பூரணை (பௌர்ணமி) நாளில் சூரியனுக்கு நேர் எதிரே சந்திரன் இருக்கும்போது, அந்தச் சந்திரனை பாம்பு (இருள்) கவ்வியதையும், மற்ற பிற கோள்களான செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்ற ஐந்தும் அதன்தன் வீட்டில் ஆட்சி பெற்று இருந்ததையும் குறிப்பிட்டு நல்லந்துவனார் பாடியுள்ளார். – நா.ரா.கி. காளைராசன், காரைக்குடி. செல் : 9443501912. கடித நாள் : 25–6–2022.

..... 23ம் பக்கம் தொடர்ச்சி.

கிராம மக்களின் ஒத்துழைப்புடன் நண்பர்கள் இணையதளம் மூலமாக நிதி திரட்டி இந்த பணியை செய்து வருகிறேன். ஒரு கிணறுக்கு சுமார் ரூ. 1 – 2 லட்சம் செலவாகும். ஆரம்பத்தில் ஊர் மக்கள் ஆர்வமில்லாமல் இருப்பார்கள். ஊர் மக்களின் பங்கேற்புடன் இந்த வேலை முடியும் சமயம் உற்சாகத்துடன் ஊரே திருவிழா கோலத்தில் இதனை கொண்டாடுவார்கள்.

மதுமஞ்சரி, திருவண்ணாமலை. செல் : 9600713701

நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம்;

	வருட சந்தா ரூபாய்	ஆயுள் சந்தா ரூபாய்;
நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள்	200	2000
விவசாயிகள் / தனிநபர்கள்	150	1500
தனிப்பிரதி	30	----
15 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1250) + (கொரியர் செலவு ரூ. 250)	1500	----

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் "சேவா"
மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மதுரை – கோச்சடை கிளை
SB A/C No – 493902010004241
IFSC Code : UBIN0549398

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
மதுரை – 625016
தொலைபேசி : 0452–2380082 , 2380943

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

நூல் அஞ்சல்

பெறுநர்

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, 2380943
Email : vivekseva@gmail.com
website : www.sevango.in

உலக மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைக்காரர்களின் ஆண்டு 2026

15–3–2022 அன்று நியூயார்க்கில் நடைபெற்ற ஐ.நா. சபை பொதுக்குழுக் கூட்டத்தில் 2026ஐ உலக மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைக்காரர்களின் ஆண்டாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்திற்கு உலகளாவில் 300 நிறுவனங்கள் (மதுரை சேவா நிறுவனம் உட்பட) மற்றும் 60 உலக நாடுகள் (மங்கோலிய நாடு முன் மொழிந்தது) ஆதரவு தெரிவித்திருந்தன. இதனால் கிடைக்காரர்களின் வாழ்வில் மறுமலர்ச்சியும், மேய்ச்சல் நில பாதுகாப்பும் உயிர்ப்பிக்கும்.

Digital support is provided by : www.NamFarmers.com Cell: 91 948 968 7000
E-mail : support@namfarmers.com

ஜனவரி – மார்ச் 2022

NamFarmers.com

2.5 லட்சத்திற்கும் மேல் விவசாயிகள் இலவசமாக இணைந்துள்ளார்கள்

மொபைல் செயலி பதிவிறக்கம்

இந்தியாவில், விவசாய மேன்மைக்காக பயன்பாட்டில் இருந்து வந்த எமது Farmer.Live வலைதளத்தை தற்போது மேலும் பல சிறப்புகளுடன், பிரம்மாண்டமாக புதிய மொழியில் www.NamFarmers.com ஆக உங்களுக்கு அறிமுகப்படுத்துவதில் தாரா புளூம்ஸ் பிரைவேட் லிமிடெட் குழுமம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது.

NamFarmers.com உலகெங்கிலும் உள்ள விவசாய பங்குதாரர்களை ஒன்றிணைப்பதோடு, அவர்களின் பல்வேறு விவசாயத் தேவைகளையும், தகவல் பரிமாற்றத்தையும் பூர்த்தி செய்யும் ஒரு "சிறந்த தளமாகும்".

இலவச பதிவு

தனித்துவமான முகப்பு பக்கம்

11+ மொழிகள்

தினமும் 2000+ விவசாயிகள் சேர்ந்து பயன்பெறுகின்றனர்

இன்றே பதிவு செய்யுங்கள்

- ஆன்லைன் வேளாண் சமூக வலைதளம்.
- இலவச டிஜிட்டல் வேளாண் மாத இதழ்கள்.
- உங்களின் புதிய வேளாண் நெட்வொர்க்கை உருவாக்கி கொள்ளும் வசதி.
- விவசாயம் சார்ந்த சந்தேகங்களுக்கு தீர்வுகளை கலமாக பெறுதல்.
- முக்கிய வேளாண் செய்திகள் மற்றும் தகவல் பரிமாற்றம்.
- சிறந்த ஆன்லைன் சந்தை.
- உலகளாவிய வேளாண் பொருட்களின் சந்தை மதிப்பை ஒப்பிடுதல்.
- தங்களின் விவசாய அனுபவங்களை, கட்டுரைகள் மற்றும் வீடியோக்கள் மூலமாக பகிர்ந்து கொள்ளல்.
- நடைபெறும்போகும் விவசாய கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் குறித்த தகவல்கள்.
- உலகெங்கிலும் உள்ள விவசாய மக்களுடன், வியாபாரிகள் மற்றும் வேளாண் நிறுவனங்கள் கலந்துரையாடல்.
- அக்ரி டைரக்டரி தகவல்களுக்கான இலவச அனுமதி.
- "அக்ரி ஜாப் போர்டல்" மூலம் மாணவர்கள் தங்களுக்கு ஏற்ற சிறந்த வேலையை தேர்ந்தெடுக்கும் வசதி.
- வேளாண் நிறுவனங்கள், விவசாய பொருட்களை காட்சிப்படுத்திட வாய்ப்பு.

T&C in Apply

+91 938 4842 373 +91 770 8222 822 support@namfarmers.com